

அமரர்

# வ. கனகசபாபதி

வாத்தியார்

அமரர்

# விசுவலிங்கம் கனகசபாபதி

## நினைவு மலர்

தோற்றம் : 15.05.1929

மறைவு : 01.09.2019



# Appappa

Though I did not spend much time with you, I was always aware of the unconditional love that you had for both Manju and I. You always spoke about us proudly and cherished all of our achievements, however small they may be. Whether it be our marks in a small test at school, or our general life decisions, you spoke about us highly. So much so, that even our parents were hesitant to suggest otherwise, in your presence.

When I came to Sri Lanka for the very first time at the age of 6, I remember being paraded around by both you and Appamma, in your arms, around the village, as if I were a local celebrity. The glee that I saw on your face when you introduced me to people is something that I will never forget. ‘How can someone that I just saw, be so happy to see me?’, I remember thinking to myself. Despite meeting you for the very first time that day, I felt like I’d known you for a lifetime.

It’s a part of our culture to say that certain characteristics are inherited by blood, regardless of the circumstances in which you are born. This was extremely apparent to me every time I met you. Whether my father liked to admit it or not, it would always make me chuckle when I saw you conduct your life in ways that were very similar to him. Your habit of keeping to a strict time schedule, for instance, is something which both my father and I have inherited. It was also extremely clear to see where my father’s interest for current affairs had come from when I saw you sit back on your chair and listen to the news everyday on your radio, without fail.

Though not in Tamil, I am told that my interest in literature and writing is something that runs in the family. Therefore, in one way or another I am in debt to you for the skills and habits that you have passed on to your children and consequently to me. You helped me define unconditional love and sincerely hope that in another lifetime I will gain the opportunity to experience this love again and more closely.

***பேரன் :* குமரன்**

# அமரர் விசுவலிங்கம் கனகசபாபதி
அவர்களின்
# வாழ்க்கைச் செல்வம்

ஈழத்திரு நாட்டின் வட பால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில், தாவடி என்னும் சிற்றூரிலே கனகசபாபதி அவர்கள் திரு விசுவலிங்கம், மீனாட்சி அவர்களின் மகனாக 15.05.1929 இல் பிறந்தார்.

பாக்கியம் அவர்களை மூத்த சகோதரியாகவும், விசாலாட்சி, நாகம்மா, செல்லம்மா, கனகம்மா, சரஸ்வதி ஆகியோரை முறையே இளைய சகோதரிகளாகக் கொண்டவர். தன்னுடைய சகோதரிகளின் வழியாக தெய்வேந்திரம், தம்பாபிள்ளை, பூபாலசிங்கம், காசிப்பிள்ளை, இராசரத்தினம் ஆகியோரை மைத்துனராகக் கொண்டு வாழ்ந்தவர்.

தன்னுடைய இளமைக் கல்வியைத் தாவடி இந்து தமிழ்க் கலைவன், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், மான்ஸ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கற்றுத் தேறினார்.

ஆசிரியத் தொழிலைத் தன் பணியாக ஏற்றுக் கொண்டு 1952 ஆம் ஆண்டு தரவளை மேற்பிரிவு தமிழ் வித்தியாலயத்தில் பணியை ஆரம்பித்தார். கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியை முடித்த இவர் ஹற்றனில் இயங்கும் ஹைலண்ட்ஸ் கல்லூரி யிலும் அதனைத் தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலுமாகத் தன் ஆசிரியப் பணியைத் தொடர்ந்து 15.05.1989 இல் ஓய்வு பெற்றார்.

அமரர் விசுவலிங்கம் & இராசமணி தம்பதிகளின் மூத்த மகளான தவமணி அவர்களை 15 ஆகஸ்ட் 1960 ஆம் ஆண்டில் கரம் பிடித்துத் தன் இல் வாழ்வைத் தொடங்கியதன் பேறாக

இரகுபதி, அமரர் சத்தியசோதி (பாபு), பிரபாகர் ஆகியோரைத் தம் வாரிசுகளாகப் பெற்றதோடு, சிவனேஸ்வரி (இரகுபதி), ஊர்மிளா (பிரபாகர்) ஆகியோரின் அன்பு மாமனாராக அமைந்தார்.

இரகுபதி - சிவமேஸ்வரி தம்பதிகளின் இல்லறப் பேற்றால் குமரன், மஞ்சுளா ஆகியோரையும், பிரபாகர் - ஊர்மிளா தம்பதிகளின் இல்லறப் பேற்றால் இலக்கியாவையும் தனது பேரப்பிள்ளைகளாகப் பெற்றுக் கொண்டார்.

தன்னுடைய பேரப் பிள்ளைகள் மட்டுமன்றி, தனது மூத்த சகோதரி யின் பூட்டப் பிள்ளை தரணீஷ் வரை தன் இறுதிக் காலத்தில் மிகுந்த பாசத்தோடும், குழந்தை உள்ளத்தோடும் அணுகியவர்.

தன்னுடைய மனைவியின் வழியாக புனிதவதி (சுப்பிரமணியம்) , தனவதி (குமாரசாமி), தருமகுலசிங்கம் (அன்னலட்சுமி) ஆகியோரை மைத்துனராகக் கொண்டு வாழ்ந்தவர்.

“கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” என்று தன் பிள்ளை களுக்கு அடிக்கடி உபதேசிப்பவர். தன்னுடைய ஆசிரியப் பணியோடு, தன் தந்தையார் வழியில் தோட்டக் கலையிலும் முனைப்போடு இறங்கிச் செயற்பட்டவர். வார நாட்களில் அதிகாலையிலும், மாலையிலும் வார இறுதி நாட்களில் பகல் முழுதுமாகத் தனது பரம்பரைத் தொழிலான தோட்டக் கலையில் ஈடுபட்டு வந்தார். பணப் பயிரான புகையிலைச் செய்கையைத் தன்னுடைய ஆசிரியப் பணி ஓய்வு காலத்துக்குப் பின்னரும் தொடர்ந்தார்.

தன்னுடைய வீட்டில் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளோடு பூந்தோட்டமும் அமைத்து தினமும் அவற்றைக் கண் போன்று பார்த்து வந்தவர், ஆடு வளர்ப்பிலும் தன்னை ஈடுபடுத்தினார். இவ்வாறாக முழுமையாகத் தன்னை ஒரு இயந்திரமாக மாற்றித் தன் இறுதிக் காலம் வரை ஓடிக் கொண்டிருந்தார். வயது தொண்ணூறைக் கடந்தாலும் தன் வாழ்நாளில் ஒருமுறையேனும் கண்ணாடி பாவித்ததில்லை. குத்து விளக்கு வெளிச்சத்திலேயே நற்சிந்தனைப் பாடல்கள், தேவார திருப்பதி கங்களை ஓதுவார்.

தாவடியில் பிறந்து கோண்டாவிலில் சொந்த வீடு கட்டி வாழ்ந்தவர் ஒரு கடும் முருக பக்தர். தாவடி வேத விநாயகர் ஆலயம், தாவடி முருக மூர்த்தி கோயில், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார், இணுவில் கந்த சுவாமியார் ஆகிய தெய்வங்களை நிதமும் சென்று வழிபடுவதோடு நல்லூர்க் கந்தனைக் காணத் தன் சைக்கிளை வலித்து நீண்ட பயணம் மேற்கொண்டு வழிபாடு கொண்டாடுவார். மாலை நேரங்களில் இணுவில் கந்தசுவாமி கோயிலில் தன் வயதொத்த மூத்தோர்களோடு இறை சிந்தனைக் கருத்துகளைப் பகிர்வார்.

யாழ்ப்பாணத்தில் எழுந்த குருசீட மரபில் வந்த சித்தர்களில் சிவயோக சுவாமிகளின் பால் தீவிர பற்றுக் கொண்டு வாழ்ந்தவர் யாழ் சிவதொண்டன் நிலையத்துக்கும் வழக்கமாகப் போய் வருவதோடு தன் அதிகாலை வீட்டுப் பிரார்த்தனையில் யோக சுவாமிகள் அருளிச் செய்த நற்சிந்தனைப் பாடல்களைப் பாடி வழிபடுவார். கோண்டாவிலில் இயங் கும் சத்யசாயி இல்லத்திலும் வாராந்த பஜனை நிகழ்வுகளில் கலந்து கொள்வார். இப்படியாகத் தன் வாழ்வின் இறுதிப் பகுதியை இறை சிந்தனையோடே வாழ்ந்ததோடு, தன் வாழ்வு முழுமைக்கும் எளிய மனிதராக வீண் பகட்டுகள் இன்றி வாழ்ந்தார்.
இறுதி நாள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட்ட போது அங்கும் கண் மூடித் தியானித்துத் தேவார மந்திரங்களை முணு முணுத்துக் கொண்டே இருந்தார்.

இவ்வாறாக இப்பூவுலகின் தன் வாழ்வியல் பயணத்தில் இயங்கிய அமரர் விசுவலிங்கம் கனகசபாபதி அவர்கள் அவுஸ்திரேலியாவில் தந்தையர் தினம் கொண்டாடிய 01.09.2019 அன்று காலமானார்.

திங்கட்கிழமை 02.09.2019 அன்று தன் குடும்பத்தவர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சூழ அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, அவரின் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தீயோடு சங்கமித்தது.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”


எனும் திருவள்ளுவர் வாக்குக்கமைய இந்த உலகில் வாழ்ந்து சிவபதமைடைந்த எம் குடும்பத் தலைவர், அன்புத் தந்தையின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது .

**குடும்பத்தார்.**

**உங்கள் நேர்மை, அன்பு, கருணை**
**எல்லாம் உங்கள் உள்**
**மெய்யுணர்விலிருந்து வரவேண்டும்.**
**போதனைகளில் இருந்தோ,**
**சமய நூல்களில்**
**இருந்தோ அல்ல.**



- ஓஷோ-



சிவயோக சுவாமிகள் (யோகர் சுவாமிகள்) மேல் அளவற்ற பக்தியும், நேசமும் கொண்ட எங்கள் அப்பாவின் நினைவில் அவர் தினந்தோறும் பாடும் யோகர் சுவாமிகள் அருளிச் செய்த "நற்சிந்தனை" பாடல்களில் தேர்ந்தெடுத்த சில பாடல்களை இத்தால் பகிர்கிறோம். இந்தப் பாடல்களைத் தந்து, பகிர அனுமதித்த யாழ் சிவதொண்டர் நிலையத்தாருக்கு எம் சிரந்தாழ்ந்த நன்றிகள்.

# நற்சிந்தனைப் பாடல்கள்

## எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன். 1

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன். 2

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்

நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன். 3

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவரும றியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன். 4

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன். 5

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழிதோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன். 6

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன். 7

ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன். 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன். 9

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன். 10

# ஏத்துக பொன்னடி

## நிலைமண்டில ஆசிரியப்பா

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழுதிலைந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்க டம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னை அறிக தானே ஆகுக
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனந்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக

அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர்கொண் டாடவும்
இவ்வண்ணம்,
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமே.

கற்பு நெறியிலிருந்து ஆண்களும் பெண்களும்
தவறுவது தான் ஒரு நாட்டின்
அழிவிற்கு முதல் அறிகுறியாகும்.
சமுதாயத்தில் கற்புநெறி தவறுதல் என்னும் கேடு
நுழைந்துவிட்டால், அச்சமுதாயத்திற்கு
அழிவுகாலம் நெருங்கிவிட்டது
என்றுபொருள். தனிமனித
ஒழுக்கத்தின் அடிப்படையில் தான்
ஒரு நாட்டின் எதிர்காலமே
அடங்கியிருக்கிறது.



# முத்திக்கு வழி

## ஆசிரியப்பா

முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ!
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலைந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிலல், தன்போற் பிறரையும்
பார்த்தல்ளு பணப்பற் றொழித்தல்ளு பண்புடன்
வார்த்தை யாடல்ளு வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே.

# சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம்பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகையொழியச் சொல்லு சிவமே
வேறுபொரு ளில்லையென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக்கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே 1

அல்லலற்று வாழவழி சொல்லு சிவமே
அகம்பிர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்க்கு நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன்செயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே 2

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர்முன்னுஞ் செல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே யனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாச மாயெங்குஞ் செல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியென்று சொல்லு சிவமே
கட்டிம னத்தையாளச் சொல்லு சிவமே. 3

# நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே
இரவுபகல் காணேனெடி 1

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி – கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி 2

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி 3

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி 4

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி 5

பரிதிகாயில் வாடாது
பவனம்வீசில் வீழாது
பரவைசூழில் ஆழாதெடி - கிளியே!
படைகள் மோதில் மாயாதெடி 6

அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனெடி - கிளியே!
சீரார்நல்லூ ராசானெடி 7

வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானெடி - கிளியே!
விளங்குநல்லூர் வாசனெடி 8

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி - கிளியே!
கலங்காத வீரனெடி 9

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி 10

# கூவு குயிலே

கூவுகுயி லேபறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே 1

நம்பிக்கை யாய்ப்பறந்து கூவுகுயிலே
நாங்கள்சிவ மென்றுசொல்லிக் கூவுகுயிலே 2

ஆதியந்தம் இல்லையென்று கூவுகுயிலே
அளந்தறியா ஒண்ணாதென்று கூவுகுயிலே 3

நீதிநெறி யைச்சென்று கூவுகுயிலே
நித்தியம்நாம் என்றுசொல்லிக் கூவுகுயிலே 4

ஊரும்பேரும் இல்லையென்று கூவுகுயிலே
ஒருபொல்லாப்பு மில்லையென்று கூவுகுயிலே 5

ஆருமறி யாரென்று கூவுகுயிலே
அகம்புறமும் இல்லையென்று கூவுகுயிலே 6

ஐம்பூதம்நா மல்லவென்று கூவுகுயிலே
ஐம்பொறிநா மல்லவென்று கூவுகுயிலே 7

ஆன்மாவே நாமென்று கூவுகுயிலே
அங்குமிங் கும்பறந்து கூவுகுயிலே 8

மாண்புட னேபறந்து கூவுகுயிலே
மரணம்பிறப் பில்லையென்று கூவுகுயிலே 9

நாமேநா மென்றுசொல்லிக் கூவுகுயிலே
நமக்குக்குறை வில்லையென்று கூவுகுயிலே 10

போமேபோம் வினையென்று கூவுகுயிலே
புண்ணியம்போல் பாவமென்று கூவுகுயிலே 11

நல்லூரான் வீதியிற்போய்க் கூவுகுயிலே
நல்லதொண்டர் நாமென்று கூவுகுயிலே 12

**குறை சொல்பவர்களுக்கு
நன்றி சொல்லுங்கள்
ஏனென்றால் உங்களை
நீங்களே செதுக்கி
கொள்வதற்கு அவர்கள் தான்
உளி கொடுக்கின்றனர்**



# நல்லூர் வீதியில்

*இராகம் - பிலகரி* *தாளம் - ரூபகம்*

**பல்லவி**

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே

**அநுபல்லவி**

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)

**சரணங்கள்**

வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே (எந்நாளும்) 1

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்திநிச் சயமே (எந்நாளும்) 2

# அடைக்கலம் அடைக்கலம்

*இராகம் - ஆரபி* *தாளம் - ஆதி*

**பல்லவி**

பாரையனே - கடைக்கண்ணால் - பாரையனே

**சரணங்கள்**

பாரைய னேமனம் பதையாம லடியேனைச்
சேரைய னேயுன் செழுங்கழற் கடைக்கலம் 1

ஆரைய னேதுணை அடியேற் குனையல்லால்
தீரைய னேமிடி திருவடிக் கடைக்கலம் 2

ஊருந் துணையில்லை உற்றார் துணையில்லை
ஆருந் துணையில்லை அடியே னடைக்கலம் 3

சீருந் துணையில்லைச் செல்வந் துணையில்லை
சீரார் திருவடிக் கடியே னடைக்கலம் 4

சிந்தையி லன்பு பொருந்த வடியேற்குத்
தந்திடு நின்னருள் தாளிணைக் கடைக்கலம் 5

எந்தையே எம்பெரு மானேயென் றடியார்கள்
வந்தனை செய்யும் மலரடிக் கடைக்கலம் 6

கொத்தார் குழலுமை கொண்டாடு மையனே
செத்தா ரெலும்பணி செல்வநிற் கடைக்கலம் 7

வித்தார விடையேறி வெளியில் நடம்புரி
அத்தாவுன் பொன்னடிக் கடியே னடைக்கலம் 8

தத்தாதித் தோம்திமி தாந்தோமென் றாடிடும்
கத்தாவே யுன்னுடைக் கழலடிக் கடைக்கலம் 9

நெடியமா லயன்தேடிக் காணாமல் நின்றிடும்
நிமலனே நின்னடிக் கடைக்கல மடைக்கலம் 10

**நாம் இன்று இப்படி இருப்பதற்கு நாமே பொறுப்பு இனி எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ. அப்படி நம்மை செய்து கொள்வதற்கான ஆற்றலும் நம்மிடம் உள்ளது.**



# இந்த ஆன்மா நித்தியம்

*இராகம் - நடபைரவி* *தாளம் - ஆதி*

**பல்லவி**

அந்த வாக்கும் பொய்த்துப் போமோ
ஆசான் நல்லூர் வீதியி லருளிய

**அநுபல்லவி**

இந்த ஆன்மா நித்திய மென்ற (அந்த)

**சரணங்கள்**

மங்கைய ராடவர் மைந்தர்கள் கூடி
மகிழ்ந்தும் புகழ்ந்தும் வரதனைத் தேடி
வந்தனை புரிய வருவார் கோடி
செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொன்ன (அந்த)

தேங்கா யிளநீர் தீங்கனி கொண்டு
திருவடித் தொண்டு செய்வதைக் கண்டு
ஐம்புல னடங்கி நின்றவ ருண்டு
ஆரறி வாரென ஆசான் சொன்ன (அந்த)

கௌரிம னோகரி ஆனந் தாச்சி
கமல ஆச்சிசெல் லாச்சி ஐவரும்
உவந்து சேவடி கும்பிடு முத்தமன்
தவத்தைச் செய்திடத் தந்திடு மருளே (அந்த)

# அப்பா

அப்பா அம்மா ஹற்றனில் இருந்த காலத்தில் அம்மா சமைக்கும் போது அப்பா ஒத்தாசையாக சமையலுக்கு உதவிசெய்துகொண்டு இனிமையாகப் பாடுவார் . அவர் பாடும் பாடல்கள் அனேகமாக A.M.ராஜா அல்லது P. B. ஸ்ரீநிவாஸ் பாடல்களாக இருக்கும் அதிலும் “காற்று வெளியிடை கண்ணம்மா உன்காதலை எண்ணித் தவிக்கின்றேன்” என்ற பாடலை மிக அருமையாகப்பாடுவார்.

அவர் தனது இறுதிக்காலம் வரை ஆலயங்களில் தேவாரம் மற்றும் பிள்ளையார் கதை பாடல்களை பாடிவந்தார்.அப்பா ஒரு கடுமையான உழைப்பாளி , முருக பக்தன், 16 வகையான நீச்சல் தெரிந்தவர், ஒழுக்க மும் மனவுறிதியும் மனக்கட்டுப்பாடும் கொண்டவர். எம்மையும் பல கலைகளையும் கற்குமாறு ஊக்கப்படுத்துவதோடு நீச்சல், சைக்கிள் ஓடுவதை அவரே கற்றுத்தருவார். அவருடைய BSA சைக்கிளில் தான் நான் சைக்கிள் ஓடக் கற்றுக்கொண்டேன்.

பாடசாலையில் கற்றுக்கொடுப்பது போக, தனக்குத்தெரிந்த பிள்ளை களுக்கு வாழ்க்கைக்கு தேவையான நெறிமுறைகளையும் சொல்லிக் கொடுப்பார்.

1977 பொதுத்தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் அறுதிப்பெரும்பான்மை பெரும்பான்மை பெற்றது அப்பாவுக்கு பிடிக்க

வில்லை . தேர்தல் முடிவு வெளியானதும் “இது ஜனநாயகத்துக்குக் கூடாது” என்றார். பின்னர் நடந்ததெல்லாம் நாம் எல்லோரும் அறிந்ததே.

தனது நாட்டின் மீதும் பிறந்த ஊரான தாவடியின் மீதும் அளவற்ற பாசம் கொண்டவர். தனது பிள்ளைகள் இணுவிலில் பிறந்தாலும் தாவடி என்றே பதிந்துள்ளார். அவருக்கு நான் வெளிநாட்டுக்குப் போவது அறவே பிடிக்கவில்லை. ஆனால் பின் நாட்களில் இலங்கையில் நடந்த கசப்பான சம்பவங்களால் நாங்கள் போனது சரிதான் என்பார். தனது கருத்து பிழை யென்றாலும் அதைப்பெரும்தன்மையுடன் ஏற்றுக்கொள்வார்.

எமது சம்பாசணையில் “என்னப்பா இப்ப யாழ்ப்பாணத்தில் நிறைய விபத்துக்கள் நடக்குதே என்று கேட்டால், ஓ இப்ப இங்க வெளிநாட்டு காசு ஆறுஆக ஓடுது கண் மண் தெரியாமல் ஓடுறாங்கள் என்பார்.” இதோ அடுத்த மாதம் பலாலியில் இருந்து இந்தியாவுக்கு பிளேன் ஒடப் போகுதாம், என்னையும் அம்மாவையும் 1967 இல் இதே விமான நிலையத்தினூடாக தென்இந்தியா கூட்டிச்சென்று அனைத்து பிரசித்தி பெற்ற தலங்களையும் காட்டினார். தன்நம்பிக்கை கொண்டவர், ஒரு வாத்தியாராக இருந்துகொண்டு, எமக்கு தன்னாலான அனைத்து வசதிகளையும் அள்ளித் தந்தவர். தனது சொந்தச் சேமிப்பில் கல்வீடு கட்டி, எமது படிப்பை கருத்திற்கொண்டு மின்சார வசதி செய்து கொடுத்தார். பெரும்தெருவிலிருந்து உள்ளே மின்சாரம் கொண்டுவர மூன்று கம்பம் நட வேண்டும், 1976 இல் இதற்கு 6000 ரூபா தேவை, அயலுக்கும் பயன்படும். ஆனால் அயலட்டையிடம் இப்போது போல் அதிக வசதி யில்லை. சண்முகநாதன் மாமா (மனிதருள் மாணிக்கம்) ஒரு போஸ்ற் கொடுத்தார், மிகுதி அப்பாவே பொறுப்பேற்றார். சொற்பகாலத்தில் ஏனைய வர்களும் மின்சாரம் பெற்றுக்கொண்டார்கள்.

ஒவ்வொரு ஞாயிறும் தவறாமல் இலங்கை நேரப்படி பிற்பகல் 1: 30 மணிக்கும் 2:00 மணிக்குமிடையில் தொலைபேசியில் நாங்கள் பலதையும் அலசுவோம், அரசியல் நிச்சயமாக இருக்கும். அண்மையில் அவர் பிறக்ஸிட் பற்றி கேட்பார், நான் இலங்கை அரசியல் பற்றி கேட்பேன். இங்கே நேரத்தை குறிப்பிட்டதன் நோக்கம், அப்பா எல்லாமே நேரட்ட வணையின்படியே செய்வார். இது அவர் இளைப்பாறிய பின்னும்

தொடர்ந்தது. 1 : 00 மணிக்கெடுத்தால் செய்தி கேட்டுக்கொண்டிருப்பார், 2:00 மணிக்குப் பிறகெடுத்தால, மதியநேரத் தூக்கத்துக்கப் போய் விடுவார்.

“காலத்தே பயிர் செய்” என்பார். எதையும் அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருப்பார். நாங்கள் விடுமுறையில் ஊர் போனாலும் அவரது வேலைகளை மாற்ற மாட்டார்.

எனது இளமைக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ஹற்றன் புகையிரதப் பயணத்தில் வழிநெடுகவுமுள்ள முக்கிய கேந்திர நிலையங் களை காட்டிக்கொண்டே வருவார். இது எனது சமூக கல்விக்கு பேருதவி யாகவிருந்தது.

சிறுவயதில் நல்லூருக்குக் கூட்டிக்கொண்டுபோய் தோழில் இருத்தி சுவாமி காட்டுவார், கீரிமலைக்குக் கூட்டிச்சென்று நீச்சல் பயிற்றுவார், அவருக்கு 16 வகையான நீச்சல் தெரியும். யாரிடமும் கை நீட்டி எதுவும் பெற்றதில்லை, எமது கை (Palm) மேலே இருக்க வேண்டுமென்பார்.

நாம் எத்தனையோ தடவை வெளிநாடுகளுக்கு வருமாறு அழைத் தும், அதை அடியோடு மறுத்ததோடு எம்மை தாய்நாட்டுக்கு மீண்டும், மீண்டும் வரவைப்பதிலேயே அக்கறையாகவிருந்தார். எமது தொடர்பு கள் அற்றுப்போக கூடாதென்பதில் மிகவும் அக்கறை கொண்டார் .

அந்த கடைசி ஞாயிறு, திருமண நிகழ்வுகளுக்குப் போகவிருப்ப தால் அடுத்தநாள் அழைக்கச் சொல்லி அம்மா சொன்னதால் திங்கள் பேசும் போது, அப்பா நான் வாற திங்கள் அங்கை வந்திடுவன் இப்ப போய் படுங்கோ என்றேன். அதுதான் அவருடன் கதைத்த கடைசி வார்த்தை கள். அவர் அடுத்த ஞாயிறு அதிகாலையே நிரந்தரத் தூக்கத்திற்குப் போய்விட்டார், எனக்காக ஒருநாள் காத்திருக்கவில்லை. இதையும் அவருடைய நேரப்படியே செய்தாரோ என்னவோ தெரியவில்லை. எனது வாழ்வில் இனி வரும் ஞாயிற்றுக்கிழமைகள் எப்போதும்போல் இருக்கப் போவதில்லை.

*அன்பு மகன்*
**ரகு (இரகுபதி)**

# நெஞ்சை விட்டகலா மாமாவின் நினைவலைகள்

"பிரியாதார் நட்பு என்றும் மாறாது" என்ற கூற்றிற்கிணங்க எங்கள் மாமா உடலால் பிரிந்த போதும், உள்ளத்தால் நாம் மறக்க முடியாது என்பது முற்றிலும் உண்மை.

நான் கண் விழித்துப் பார்க்கும் முன்பே எனக்கு "சுசீலா" என்ற நாமத்தை வைத்ததும் அவரே. வீட்டில் அம்மா மூத்த பிள்ளை, அடுத்தது மாமா, அடுத்து ஐந்து பெண்கள். எனவே நான் எல்லோருக்கும் மூத்த செல்லப் பிள்ளையாக இருந்ததால் மாமாவுக்கும் அளவுகடந்த பாசமோ என்னமோ தெரியாது.

ஒவ்வொருநாளும் தாவடிப் பிள்ளையார், தாவடி அம்பலவாண முருகன் கோயில்களுக்குச் சென்று தரிசித்து விட்டு எனது (தனது) வீட்டிற்கு வரத் தவறுவதில்லை. எனக்குத் தாவடிக்கு வந்து உங்களிடம் கதைக்காவிட்டால் மனதிற்கும் பெரிய சங்கடமாக இருக்கும். அதற்கு நான் சைக்கிளை ஓட்டினாலும், அது ஓடமாட்டேன் என்கிறது, என்ன செய்வது என்று சொல்லுவார். அதற்கு எனது கணவர் சைக்கிள் ஓட மாட் டேன் என்கிறது என்றால் நீங்கள் ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கி ஓடுங்கோவன், வாங்கித் தரட்டோ? என்பார். தங்கச்சி! தம்பியின்ரை கதையைக் கேளன் என்று பகிடி விட்டு பலமாகச் சிரிப்பார். அது தற்பொழு தும் காதில் ஒலிக்கிறது. "வேலையுமில்லை நேரமுமில்லை" என்பது

அவரது மகுடவாசகம். அவருக்குப் பெற்றோர் மீது அளவு கடந்த விருப்பம். தாயை மதுரை மீனாட்சி என்றும், தந்தையைக் காசி விசுவநாதர் என்றும் கூறுவார். தற்பொழுது எங்கும் மதுரை மீனாட்சி ஆட்சி தான் நடக்கிறது, அப்ப உங்கள் வீட்டிலும் மதுரை ஆட்சி தான், அது உண்மைதான் என்பார்.

கோயில் திருவிழாக்காலங்களில் பத்திரகாளி, பரராஜசேகரப் பிள்ளையார், இணுவில் கந்தசாமியார், தாவடி முருகன், தாவடிப் பிள்ளையார் போன்ற கோயில்களில் தேவாரம் பாடத் தவறுவதில்லை. கணீர் என்ற குரல் யாவரையும் பரவசமடையச் செய்யும் என்றால் மிகையாகாது.

அந்தக் காலத்தில் தங்களைக் கற்பிக்கும் ஆசிரியர் தான் சிறுவனாக இருந்த போது நவராத்திரி மற்றும் திருவெம்பாவைக் காலங் களில் தேவாரம் பாடுவதற்கு ஒவ்வொரு வீடு வீடாக் கொண்டு செல்வார் களாம். வீட்டுக்காரர் அவல், கடலை அவித்துக் கொடுப்பார்களாம். அவற்றைக் கொண்டு நவராத்திரி பூசை செய்வார்களாம். அப்படியாகப் பாடியதால் தான் கோயில்களில் பாடும் வழக்கம் வந்தது என்பார்.

தனக்குத் தண்ணீரில் நீந்துவதற்குச் சரியான விருப்பமாம். சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய வளவுக்குள் ஒரு ஆழக் கிணறு இருந்ததாம். அதில் தானும் நண்பர்களுடன் சேர்ந்து நீந்துவாராம். மழை காலத்தில் நீர் நிரம்பிய கிணற்றில் எட்டாத் தண்ணீரில் அந்த மாதிரி நீந்துவாராம், என்ன துணிச்சல்.

தான் சின்ன வயதில் பாடசாலைக்குப் போக மாட்டேன், வயிற் றுக்கை குத்துது என்று அடம்பிடிப்பாராம். ஆச்சி ஒரு பூடு உள்ளியை எடுத்து அடுப்புக்கை போட்டுச் சுட்டுப் போட்டு இதைச் சாப்பிட்டு விட்டுப் போ, நல்லாப் படிக்க வேணும் அப்ப தானே நல்லாய் வருவாய் என்று கூறுவாராம். அப்படி வழிகாட்டியதால் தான் நான் இப்ப ஒரு கையெழுத் தைப் போட்டுச் சாப்பிடுகிறேன் என்பார். தற்பொழுதும் சிவதொண்டன்

நிலையத்துக்குப் பௌர்ணமிக்கு அன்னதானம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் முதல் வரும் ஞாயிற்றுக்கிழமை அங்கு செல்வது வழக்கம், அங்கு போனால் தான் ஒரு மாதத்துக்கு உசார் ஊறிப் போட்டது போல உடம்புக்கு இருக்கும் என்பார்.

அவருக்குப் புகழ் பெற்ற ஆலயங்களுக்குச் செல்ல விருப்பம். எனவே வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில், திருக்கோணேச் சரம், மட்டுவில், பன்றித்தலைச்சியம்மன், நயினாதீவு, காரைக்கால் சிவன் கோயில் போன்ற இடங்களுக்கு மாமா, மாமியையும் கூட்டிச் சென்றோம். அவர்களுக்கு நல்ல சந்தோசம்.

எங்கள் வீட்டு எல்லா நிகழ்வுகளிலும் மாமா, மாமி கலந்து கொள் வார்கள். புதுமனைப் புகுவிழா, எனது திருமணம், காயா திருமணம், திவ்யா திருமணம், ருதுசாந்தி வைபவங்கள் எனது பேர (அவரின் பூட்டப்) பிள்ளைகளின் சோறு பருக்கல் நிகழ்வுகளிலும், பேரன் தரணீஷ் தொட்டிலில் போட்ட நிகழ்வில் இருந்து முதலாவது பிறந்த நாள் வரை கலந்து கொண்டார்கள்.

நேரந் தவறாத உணவுப்பழக்கமும், இறை பிரார்த்தனையும் தான் 90 வயது வரை ஆரோக்கிய மனிதனாக வாழ வைத்தது. நல்லூர் தீர்த்தத் திருவிழா அன்று “தனக்குச் சுகமில்லை, தங்கச்சியிடம் சொல்லு” என்று மாமியிடம் கூறினாராம், நாங்கள் நல்லூரில் நின்றதால் தொலை பேசி அழைப்புக் கேட்கவில்லை. ஐந்தாவது மணியின் போதே நாம் விடையத்தை அறிந்தோம். சென்று பார்த்த போது என்னைச் சிறுவயதில் தூக்கியது மாதிரி இரு கரங்களையும் நீட்டி அழைத்தார். நான் அவரின் கரங்களைத் தடவியவாறு “உங்களுக்கு ஒன்றுமில்லை, முருகனைக் கும்பிடுங்கோ எல்லாம் சுகமாகி விடும்” என்றேன். எனது மருமகன் அவரைச் சோதித்துப் பார்த்தார். உடனே யாழ் போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல மூத்தமகனான ரகுவிடம் தொடர்பு கொண்

டோம். உங்கள் விருப்பமே தனது விருப்பம் என்றதும் விடிந்ததும் அவரைக் கொண்டு சென்றோம். காரில் ஏறக்கூட நடந்தே சென்றார் என்றால் அவரது மன வைராக்கியத்தை என்னவென்று சொல்வது?

இதுவரை ஆஸ்பத்திரிக்குச் செல்லாத அவர் "எங்கை தம்பி போகிறியள்?" என்று கேட்ட போது "உங்கை உதில காட்டக்கூட்டிக் கொண்டு செல்கிறோம்" என்று நாம் கூற,

"இல்லை, தூரம் போலிருக்கிறது" என்று சொன்னார். அப்பவும் நிதானம் தவறவில்லை.

அன்று பின்னேரம் நானும் கணவனும், ஆஸ்பத்திரிக்குச் சென்ற போது "தனக்கு இங்கு வந்ததால் நல்ல ஆறுதலாக இருக்கிறது, நல்ல சுகம்" என்றார். இரண்டு நாளைக்கு முன்பு இங்கு வந்திருந்தால் இன்னும் நன்றாக இருக்கும், நீங்கள் நல்லூரானைக் கும்பிட்டுக் கொண்டு இருங்கோ, நாளைக்கு விடிய நாங்கள் வருகிறோம்" என்று கூறிவிட்டு வந்தோம். அதிகாலை 3.40 மணிக்கு ஆஸ்பத்திரியில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பு மாமா சுவர்க்கத்துக்குப் போய் விட்டதாக ஒலிக்கிறது. வாழ்வில் இதை மறக்க முடியுமா?

தாவடி கந்தசுவாமி முருகன் தனக்கு ஒரு இராஜகோபுரம் அமைப்பதற்குப் பொருத்தமான அன்பனாக எங்கள் மாமாவையே அடிக்கல் வைப்பதற்குத் தேர்ந்தெடுத்திருந்தார். கட்டட வேலைகள் நடைபெறுவதை நாடோறும் வந்து பார்த்துச் செல்வார். கோபுரச் செயற்பாடுகள் விரைவுற நடப்பதை எண்ணி எங்களுடன் மகிழுவார்.

***கும்பாபிஷேகம் பார்க்க அவர் தேவர்களுள் ஒருவராக வருவார் என்றால் ஆச்சரியமில்லை.***

**திருமதி சுசீலாதேவி திருச்செல்வம்**
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி
(ஓய்வு பெற்ற உப அதிபர்)

# அப்பா என்ற மனச்சாட்சி

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" இப்படித்தான் சொல்லி முடிப்பார் எனது அப்பா. தன்னுடைய வாழ்நாளின் அதிக பட்ச காலத்தைத் தன் சொந்த ஊரில் தான் கழிக்க வேண்டும் என்ற வேட்கையோடு இருந்தவர் அவர்.

அதிகபட்சமாக தன் சொந்த ஊரை விட்டு விலகி இருந்தது ஆசிரியப் பணிக்காக இலங்கையின் மலையகப் பகுதியான ஹட்டனில் இருந்ததும், அதற்குப் பின்னர் 95 ஆம் ஆண்டின் இடப்பெயர்வின் போது சாவகச்சேரி என்ற பகுதியில் இருந்ததும் தான் அவரின் உச்சபட்ச சாதனை.

"ஐயா! நீங்கள் பின்னடிக்கு இந்த நாட்டுக்கு வந்து சீவிப்பீங்களோ?"

"எங்கட நாட்டுச் சுவாத்தியம் உங்கட அவுஸ்திரேலியாவில் இருக்குதோ"

"அங்கை ஆட்களைத் திருப்பி அனுப்பினமாம் நீங்களும் வரலாம் தானே"

இப்பிடி அடிக்கடி கேட்டு என் மனதில் என்ன ஒட்டியிருக்கிறது என்று ஆழம் பார்ப்பார் அவர். ஐயா, தம்பி என்று மரியாதையான வார்த்தை யோடு தான் சிறுவயதில் இருந்து அழைக்கும் பழக்கம் அவருக்கு.

கூழைக் குடிச்சு வாழ்ந்தாலும் சொந்த ஊரில் இராசா மாதிரி இருக்கலாம் என்று பெருமையடிப்பார் 20 ஆண்டுகளைத் த்ச்ன் புலம்பெயர்வுச் சூழலில் மூழ்கடித்துவிட்ட என்னைப் பார்த்து.

ஒரு ஏழைக் கமக்காரத் தந்தையின் பிள்ளையாக ஆறு சகோதரி களோடு ஒரேயொரு ஆண் என்று வாய்த்தவர் அவர். கஷ்டப்பட்டுப் படித்து ஆசிரியத் தொழிலைக் கையிலெடுத்துப் பணிக்கு அவர் சேரவும் அவரின் தகப்பனார் காத்திருந்தது போலப் பொறுப்பைச் சுமத்திவிட்டுக் காலமாகி விட்டார். அப்பாவைப் பொறுத்தவரை தன்னுடைய வாழ்நாளின் முக் கால் பங்கை தோட்டத்துச் செம்ப்பாட்டு மண்ணிலும் பங்கு போட்டுக் கொண்டவர். விடிகாலை மூன்று, நான்கு மணிக்கே எழுந்து கிட்டத்தட்ட அரைமணி நேரம் தொலைவில் இருக்கும் தோட்டம் காணத் தன் சைக்கி ளில் இருளைக் கிழித்துப் போட்டுவிட்டு இறங்கி விடுவார். தோட்டத்தில் குழைப்போடுதலில் தொடங்கி வெயிலுக்கு முந்திப் பயிருக்கு நீர் இறைக்க வேண்டும் என்ற முனைப்போடு வருஷத்தின் பருவகாலத்துக்கேற்ப அவரின் நிகழ்ச்சி நிரல் இருக்கும். காலை ஆறரை மணிக்கெல்லாம் வீடு திரும்பி, காலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி அறிக்கையோடு குளியல், சாப்பாட்டோடு தன்னுடைய ஆசிரியப் பணிக் குக் கிளம்பி விடுவார். மாலை மீண்டும் ஒருமுறை தோட்டத்துக்குச் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு, இணுவில் கந்தசுவாமி கோயிலின் முற்றத் தில் இளைப்பாறிவிட்டு வீடு திரும்பி வெரித்தாஸ், பிபிசி, இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தானத்தின் இரவின் மடியில் வரும் வரை இயங்கிவிட்டு அந்த நாளை முடிப்பார். இதுவே வார இறுதி நாளாக இருந்தால் காலை யின் தோட்ட வேலை நீளும். அம்மா ஆக்கித்தந்த சாப்பாட்டோடு நானும் ஒரு எட்டு அங்கே போய் வர வசதியாக இருக்கும்.

“உதேன், கட்டிவச்ச குழையெல்லாம் அப்பிடியே இருக்குது, ஏன் சாப்பிடேல்லை? இல்லாட்டால் இந்தா, இந்தக் கஞ்சியைக் குடி” அப்பா ஆட்டுடன் கதைத்துக் கொண்டிருப்பார். அந்த ஆட்டுக்கு லட்சுமி என்பது பெயராம்.

"அப்பா! வயசு போன காலத்தில ஏன் உந்த ஆடு வளர்ப்பு?" அங்கலாய்ப்போடு நான்.

"தம்பி! நீங்களெல்லாம் இங்கை இல்லாத குறைக்கு ஒரு ஆறுதலு மாச்சு" என்று மெல்லச் சிரிப்போடு என் அப்பா சொன்னார் அப்போது.

ஒருமுறை என் அலுவலக வேலை நிமித்தமாக ஜப்பான் நாட்டுக் குச் சென்றுவிட்டு தொலைபேசி மூலம் அப்பாவுடன் பேசுகிறேன், "அப்பா! ஜப்பான்காறர் நேரக்கணக்கில்லாமல் மாடு மாதிரி உழைக்கிறாங்கள்" என்றேன்.

"ஏன் தம்பி நாங்கள் மட்டும் குறைச்சலோ நாங்களும் அப்பிடித் தானே" என்று யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் பிரதிநிதியாகக் குரல் கொடுத்தார் அப்பா.

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அப்பா தன் தோட்ட வேலைக் காக இறைக்கும் பணமும், வருவாயும் கையும் கணக்கும் சரியாக இருக்கும். சிலவேளை யுத்த காலத்தில் எல்லாம் மண்ணெண்ணை விலை அசுர வேகத்தில் உயர்ந்த போதெல்லாம் தோட்ட அறுவடை நஷ்ட மாகத் தான் இருக்கும். ஆனாலும் விடாமல் அடுத்த ஆண்டும் மண் வெட்டியோடு தோட்டத்துக்குள் இறங்கிவிடுவார்.

மதிப்பு மிக்க வாத்தியாராக இருந்தாலும் வரவுக்கு மீறிய செலவு இருக்காது அவரிடம். ஒருமுறை பணக்கார உறவினர் ஒருவர் அப்பாவை வாத்தியார் வேலைக்கு முழுக்குப் போட்டுவிட்டு வாருங்கள் இதைவிட மூன்று மடங்கு சம்பளத்தோடு பெரிய உத்தியோகம் தருகின்றேன் என்ற வரைத் திட்டித் தீர்த்துவிட்டு வந்துவிட்டார் அப்பா. தன்னுடைய உழைப் புக்கேற்ற அங்கீகாரம் தான் செய்யும் பணியில் இருந்து தான் வேண்டு மென்ற ஓர்மத்தின் வெளிப்பாடு அது.

பிரமச்சாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய நால்வகை நெறிகளை இந்து நாகரிகம் பாடம் படித்தபோது வராத தெளிவு அப்பாவை இப்போது பார்த்தபோது இன்னும் தெளிவாகப் புரிகிறது. அசைவ விரும்பியான அவர் முப்பது வருடங்களுக்கு முன்னரேயே அந்தச் சுவையை ஒதுக்கி வைத்துவிட்டார். மனம் ஒத்துழைத்தாலும் உடம்பை நோக வைக்கக்கூடாது என்று இப்போது தோட்ட வேலையை யும் நிறுத்தி விட்டார். இப்போது அவரின் முழு நேரப்பணியே யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைகளோடு மூழ்கியிருப்பது. சைக்கிளை எடுத்துக்கொண்டு கோயிலுக்குத் தனியாகக் கிளம்பிவிடுவது அல்லது சிவதொண்டன் நிலையத்தில் தியானத்தில் மூழ்கியிருப்பது. ஆனாலும் நாட்டு நடப்புகளையும், உலகச் செய்திகளையும் விட்டு வைப்பதில்லை. பிபிசி, தூத்துக்குடி வானொலி நிலையம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தோடு சூரியனும் சக்தியும் சேர்ந்து விட்டன. நாட்டு நடப்பைப் பற்றிய எள்ளல் ஊரை நேசிக்கும் யாழ்ப்பாணத்தானின் கண்ணோட்டத் தில் இருந்து வரும் அவரிடமிருந்து. சில சமயம் அவுஸ்திரேலியாவில் என்ன நடக்கிறது என்றும் சொல்வார் அவர்.

அப்பாவின் தோற்றமே வீண் ஆடம்பரம் கொண்டு வரும் இழுக்கு என்று சொல்லுமாற்போல இருக்கும். தன்னுடைய உழைப்பில் கட்டிய கல்வீடு தான் அவருக்குப் பெருமை. தேவையில்லாத பொருட்கள் எங்கள் வீட்டுக்கு வராது, அதேபோலத் தேவையில்லாமல் மற்றவர் பிரச்சனை யையும் வீட்டுக்குள் கொண்டு வரக்கூடாது என்பதில் உறுதியாக நிற்பவர். வெளிநாட்டில் இருந்து நான் ஊருக்குப் போகும் போதெல்லாம் "தம்பி காசு கீசு கைச்செலவுக்குத் தேவையோ" என்று கேட்பவரிடமா நான் என் டாலரைக் கட்டமுடியும்?

அப்பாவின் நடைமுறைகளையும், சித்தாந்தங்களையும் அடுத்த யுகத்தின் பிரதிநிதியாக ஒரு காலத்தில் முரண்டு பிடித்து ஏற்க மறுத்த என்னைப்போலவே இந்தத் தலைமுறை இடைவெளி தொடர்கின்றது. ஆனால் அவரின் பிரதிபலிப்புகள் எம்மையறியாமலேயே ஆட்கொண்டு

பெரும்பாலும் அதே குணாதிசயத்தோடு வாழ்வது நமக்கே புரியாமல் இருக்கும்.

ஒவ்வொரு தந்தையும் தன் காலத்து வாழ்வியலை அடுத்த தலை முறைக்கும் கடத்திப் போகும் முயற்சியிலேயே பெரிதும் வாழ்ந்து கழிப்பர்.

அம்மாவின் நேசம் என்பது வயிற்றில் இருந்ததாலோ என்னமோ உடனே பலாபலன் கிட்டிவிடும். ஆனால் அப்பாவின் நேசம் என்பது தன்னுடைய பாதையில் வந்த சவால்களும், நெருக்கடிகளும் தன் பிள்ளைக்கும் வரக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு பிறக்கின்றது. அப்பாவும் ஆண் பிள்ளைக்குமான உறவு எப்போதும் ”போரும் சமாதான மும்” என்ற நிலையில் தான் இருக்கும். கிட்டத்தட்டத் தன் மனச்சாட்சி யோடு சண்டையிட்டு வெல்வது போன்ற உணர்வு ஒவ்வொரு தகப்பனுக் கும்.

ஆனால் அந்தத் தந்தையின் உபதேசங்கள் தானாகப் புரிவதும், பின்னர் தெளிவதும் ஒவ்வொரு மகனும் தந்தையாகும் போதுதான்.

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற வாக்கினை அப்பா இப்போதும் சொல்லுமாற் போல அசரீரியாகக் கேட்கிறது மனதில்.

*அன்பு இளைய மகன்*
**பிரபு ( பிரபாகர்)**

இந்த உலகமே உன்னை திரும்பி பார்க்க வேண்டுமென்றால், நீ யாரையும் திரும்பி பார்க்காதே....



# பெரியத்தான்

பெரியத்தான் என்று எங்கள் குடும்பத்தவரால் அன்பாக அழைக்கப் பட்ட கனகசபாபதி அத்தானின் திடீர் மறைவு அனைவரையும் மிகுந்த கவலையில் ஆழ்த்தியிருக்கிறது.

கடந்த ஜூன் மாதம் இணுவில் கந்தசுவாமி கோயில் மஞ்சத் திருவிழாவுக்கு நாங்கள் வந்திருந்த போது வழமை போல் பின்னேரம் கோயில் வழிபாடுகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் வழியில் எங்களை இணுவில் வீட்டில் சந்தித்தார்.

நமது உரையாடலின் போது கடந்த மே மாதம் 15 ஆம் திகதி தான் தொண்ணூறு வயது கடந்ததை நினைவூட்ட கையால் சைகையாக 90 என்று எழுதிக் காட்டினார். அவருடைய தினசரி நடவடிக்கைகளைத் தெரிந்த எவரும் 90 ஐக் கடந்தவராகச் சிறிது கூட நம்ப மாட்டார்கள்.

நமது கடைசிச் சந்திப்பில் என்னுடைய கன்னத்தைத் தடவி, யோகர்சுவாமிகளின் பாடல்களையும் பாடி விடைபெற்றுச் சென்றார். மிகுந்த ஈடுபாடுடைய ஆசிரியராக இளம் வயதிலிருந்து கடின உழைப் பாளியான விவசாயியாகவும் திகழ்ந்தார். தான் வாழும் வீட்டைப் பற்றிச் சொல்லும் போது “இது ஏழை வாத்தியார் ரூபா 17,000 க்குக் கட்டிய வீடு

இப்போது கூரை திருத்துவதற்கு ரூபா 25,000 கேட்கிறார்கள் என்று வேடிக்கையாச் சொல்வார்.

அவர் எந்த வியாதிகளையும் கொண்டிராதவர், சிறு நோய்க்குத் தானும் எந்த வைத்தியரையும் நாட விரும்பாதவர்.

கடைசி மூச்சு வரை எவரிடத்தும் எந்தவித உதவிகளையும் பெறாமல் மிகவும் கண்ணியமான அவர் வாழ்க்கை இளைய சமூகத்தி னருக்கு எடுத்துக் காட்டானதாகும்.

ஆசிரியராக இருந்தபோது நேர சூசிகைப்படி பணியாற்றியது இளைப்பாறிய பின்னும் தொடர்வதாகத் தன் வாழ்க்கை முறை பற்றி நகைச்சுவையாக எங்களுக்குக் கூறுவார்.

தன் பிறந்த மண்ணின் மேல் அதீத பற்றும், தான் ஏற்றுக்கொண்ட சமயத்தில் மிகுந்த ஈடுபாடும், மன வைராக்கியத்துடன் கூடிய தன் கடின உழைப்பில் நம்பிக்கையும், தன் குடும்பம், உற்றார், உறவினர் மீது அளவற்ற நேசமும் கொண்டு ஒரு நிறைவான முழு வாழ்க்கை வாழ்ந்து இறைவனடி சேர்ந்திருக்கிறார்.

வயது தொண்ணூறைக் கடந்தாலும் சுறுசுறுப்பாக வாழ்ந்தவரின் திடீர் மறைவு எங்கள் குடும்பத்தார் அனைவரையும் மிகுந்த கவலைக் குள்ளாக்கியிருக்கிறது.

***அவருடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.***

**புவனச்சந்திரன் சின்னத்துரை**

# மாமாவுக்கு இதய அஞ்சலி

பிறக்கும் மனிதன் இறப்பதும், அதனை நினைத்துத் துன்புறுவதும் இயற்கையின் நியதி. தம் அறிவு, ஒழுக்கம், பண்பு என்பவற்றால் தன் குடும்பத்துக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்து வாழ்ந்தவர் எங்கள் மாமா. அவர் வாழ்வாங்கு வாழ்ந்து 90 வயதில் சிவ கதி சேர்ந்து விட்டார். அவரின் இழப்பு எங்களுக்கு அதிர்ச்சியையும், ஆழ்ந்த துயரத்தையும் தந்துள்ளது.

“தாய் அன்பைப் போன்றது தாய்மாமன் அன்பு” என்பார்கள். அதனைப் போல எங்கள் மாமாவின் சைக்கிள் பகல் 10 - 12 மணிக்கும் இடையில் எங்கள் வீட்டு வாசலில் நிற்கும். ஒவ்வொரு நாளும் வந்து சுக நலம் விசாரித்து புத்திமதிகள், ஆன்மிகக் கதைகள், பழங்கதைகள் சொல்லிப் பத்திரிகை படித்து விட்டு, இருந்து கதைத்து “நான் வாறன்”, “கனகம் போட்டு வாறன்” என்று அம்மாவுக்குச் சொல்லிப் போவார்.

“நாளைக்கு நான் வரமாட்டன் பென்சன்”, “நாளைக்கு வெள்ளிக் கிழமை கோயிலுக்குப் போறன்”, “நாளை கல்யாண வீடு” என்று சொல்லிப் போகிற மாமா திரும்பி வர முடியாத இடத்துக்குச் சொல்லாமல் போய்விட்டார். இந்த வேதனையை நினைத்துப் பார்க்க முடியாது.

எங்களுக்கு ஒரு நோய், துன்பம் வந்தால் திருநீறு கொண்டு வந்து பூசி “இனி எல்லாம் சுகம் வரும் நீங்கள் கவலைப்படாதையுங்கோ” என்று சொல்லுவார். தாவடிக்கு வராமல் இருக்க மாட்டார்.

"சைக்கிள் தாவடிக்குத் தன்னைக் கொண்டு வருகுது" என்பார். இனி எங்களுக்கு ஆறுதல் கூற மாமா இல்லை.

நாங்கள் ஒரு நல்ல காரியம் செய்வதென்றால் மாமாவுக்கு முதல் சொல்லி அவரின் அபிப்பிராயம் கேட்டு அவரின் ஆசியும் பெற்றுத்தான் செய்வோம். தாவடிப் பிள்ளையார் கோயில் திருவிழா என்றால் அவரின் வெள்ளை வேட்டிக்கட்டும், சால்வையும் கண்ணுக்குள் நிற்கிறது. பிள்ளையார் கோயிலில் அவருக்குத் தனி மரியாதை.

"வாத்தியார் தேவாரம் பாடுங்கோ" என்றதும் தேவாரம் பாடி மகிழ்ந்து "நான் பாடியது நல்லா இருந்ததா?" என்று கேட்பார். நல்லாய் இருந்தது என்றால் அவரின் முகத்தைப் பார்க்க முடியாது, அவ்வளவு சந்தோசம்.

நாங்கள் பிள்ளையின் திருமண அலுவலாக இந்தியாவிற்குப் பயணம் போவதற்குச் சொல்லப் போனோம். அவர் வீட்டில் இல்லை. மாமா இராமகிருஷ்ண மிஷனுக்குப் போனதாக மாமி சொன்னார். அங்கே போனவுடன் எழும்பி வந்து என்ன என்று கேட்டு "நீ நல்லா இரு, அவன் நல்லா இருப்பான், வடிவாச் செய்து போட்டு வா" என்று கும்பிட்டுச் சொல்லி வழியனுப்பி வைத்தார். இப்படி ஒரு மாமாவை இனி எங்கே காண்போம். அவரின் ஆசி எங்களுக்கு எப்பவும் கிடைக்க வேண்டும்.

அவரின் ஆத்மா சாந்தியடைய அம்பலவாண வேத விநாயகரை யும், அம்பலவாண கந்தசாமியாரையும், தாவடி வடபத்திரகாளி அம்பாளையும் வேண்டுகிறோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**அன்பு மறவாத மருமகள்**
**திருமதி. ரேணுகா வேலாயுதபிள்ளை**
தாவடி வீதி, தாவடி தெற்கு,
கொக்குவில்.

# பெரியப்பா!

பெரியப்பா எங்கள் அன்புக்கும் பாசத்துக்கும் பெருமதிப்பிற்கும் உரியவர். எம் சிறு வயதில் அவரைக் கண்டால் எங்களுக்கு ஒருவித பயம் ஏனென்றால் அவர் ஒரு ஆசிரியர். பாடசாலையில் மட்டுமல்ல வீட்டிலும்தான். அதனால் அவர் மேல் ஒரு மரியாதைக்குரிய பயம்.

தினமும் மாலை 7.30 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வருவார். அவர் நடக்கும்போது கால்களை நிலத்தில் தேய்த்துக் கொண்டு நடப்பார். அந்த சத்தம் கேட்டதும் நாங்கள் புத்தகம் படிப்பதுபோல் இருப்போம். ஆனால் அவர் சொல்லுவார், எந்த நேரமும் படித்துக்கொண்டிருக்ககூடாது, சிறுபிள்ளைகள் மாலையில் ஓடி விளையாட வேண்டுமென அப்பாவிடம் சிறிது நேரம் தினமும் உரையாடி விட்டுச் செல்வார். அப்பாவை மிகவும் அன்புடன் தம்பி, தம்பி என்றே அழைப்பார்.

அவரை பார்த்தல், அவர் பேசினால் மிகவும் கோபக்கார மனிதர் போல் தோன்றும். ஆனால் மிகவும் அன்பானவர், பண்பானவர் இறை பக்தி கொண்டவர். மிக மிகத் துணிச்சல் கொண்டவர். ஒருநாள் மதிய நேரம் தோட்டத்துக் கிணற்றில் ஒரு வீட்டு வேலைக்காரப் பெண் தற்கொலைக்காகக் குதித்து விட்டார். வயது வந்த ஆண்கள் பலர் வேடிக்கை பார்த்த வண்ணம் நின்றார்கள்.

அந்த வழியே பாடசாலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த பெரியப்பா என்னவென விசாரித்துவிட்டு உடனே கிணற்றில் இறங்கி மிகவும் ஆழ மான கிணறு அந்தப் பெண்ணையும் தூக்கிகொண்டு வெளியே வந்து அந்த பெண்ணின் உயிரையும் காப்பாற்றி அந்த வீட்டுக்காரரின் மானத் தையும் காப்பாற்றினார். அப்படிபட்ட ஒரு தன்னம்பிக்கை கொண்டவர்.

நான் ஜேர்மனி செல்கின்றேன் எனக் கூறியதும் அவர் சொன்ன வார்த்தை "ஐரோப்பா மனிதர்களின் வாழ்க்கையை மாற்றி விடும், மிகவும் அவதானம்" என. ஆனால் அவர் அன்று கூறியது எனக்கு இப்போதான் புரிகிறது. பெரியப்பா எங்களிடத்தில் இல்லாவிட்டாலும் அவர் நினைவுகள் எங்களை சுற்றியே வருகின்றன. என்றும் எங்கள் நினைவுகளிலே நிற்கின்றார்

***ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி .***

**சுப்பிரமணியம் துளசிதாஸ்**

**பாவமும் புண்ணியமும்
ஒன்றாகவே இருக்கும்.
திருடுவது அவசியம் என்று
திருடன் சொன்னால்
தண்டிப்பது அவசியம் என்று
நீதிபதி சொல்வார்**



# தாவடி என்னும் ஊரில்

திருப்பதி எனும் அன்னை மடியில்
ஆறு பெண் மக்களுக்கு ஆதரவாக
அவதரித்த ஒரே ஆண்மகன் நீங்கள்
அனைவரையும் விட்டு போனதெங்கே மாமா
எனக்கும் என் சகோதரிகளுக்கும் இதுவரை
காலம் இருந்த அந்த ஒரே ஒரு மாமா எங்கே?
தாய்மாமன் என்று சொல்ல இனி
எமக்கு யாரும் இல்லையே மாமா
இரண்டு கிழமைகளுக்கு முதல் தான்
உங்களை சந்தித்து விட்டு
இலண்டன் திரும்பினேன் இத்தனை அவசரமாய்
எம்மை விட்டு எங்கே சென்றுவிட்டீர்கள்
என்னை பார்க்க தான் காத்து இருந்தீர்களா
என நினைக்க தோன்றுகின்றது

அகவை தொண்ணூறு ஆகியும் என்றும்
உங்கள் உடலும் முகமும் வாடியதில்லை
உங்களோடு பேசியவர் உள்ளம்
என்றும் சந்தோஷத்தில் திளைக்கும்
இன்று மூடிவைத்து உங்கள் உடலை
கூடிவந்து கொண்டு செல்லும்
கொடிய நிலை ஏன் மாமா
மாமியை எப்ப பார்த்தாலும்
மாமாவுக்கு சமைக்க வேணும் என்று சொல்லுவா

இப்ப அவ இனி யாருக்கு சமைக்க
அப்படி என்ன அவசரமாய் மாமியை
தனியே தவிக்க விட்டு சென்றீர்கள்

மாமா மாமா என்று மருமக்கள்
நாங்கள் கலங்குகின்றோம்
தனது ஒரே ஒரு அண்ணா எங்கே என்று
எனது அம்மா கலங்குகின்றார்
மாமாவை பார்க்க தான் இந்தமுறை ஊருக்கு
போனீர்களோ என எனது மனைவி கேட்கின்றார்
தாத்தாவுக்கு என்ன நடந்தது என்று எனது
பிள்ளைகள் கேட்கின்றார்கள்
எல்லோருக்கும் என்ன பதில் சொல்வேன் மாமா

காலனவன் எப்போது வருவான் என்று
யாருக்கும் தெரியாது
மரணம் என்பது யாராலும் வெல்ல முடியாதது
என்று மூத்தோர்கள் சொல்வார்கள்
அதன் அரைவாசி அர்த்தம்
எங்கள் அய்யா இறக்கும் போது புரிந்தது
இன்று எங்கள் தாய் மாமன் நீங்கள் இறந்த போது
அதன் முழு அர்த்தமும் புரிந்துவிட்டது

நீங்கள் எங்கு சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம்மை விட்டு பிரியாது
காலங்கள் கடந்தாலும்
ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனதில்
அன்பின் அடையாளமாக நீங்கள்
என்றும் நிலைத்திருப்பீர்கள்
உங்கள் நினைவுகள் எங்கள் மனதில்
என்றும் நிலைத்திருக்கும்

*உங்கள் ஆத்மா சாந்தி அடைய வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.*

**மருமகன்**
**செந்தில் குடும்பத்தினர்**

# சிந்திய கண்ணீருடன் சிறு சிறு நினைவுகள்

எனது வீட்டாருடன் Skype இல் தொடர்பு கொள்வேன். அப்பொழுது சில நேரங்களில் மாமா, மாமியுடன் கதைப்பேன். ஒருநாள் அம்மா கூறினார் மாமாவிற்கு வருத்தம், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் போகிறோம் என்றார். பின்பு திடீரெனத் தங்கை தொலைபேசியில் அழைத்தார். எனக்கு மனதில் சிறு பயம், மாமா போட்டார் என்றாள்.

என் கண்ணில் கண்ணீர் ஓட ஆரம்பித்தது. கடைசியாக அவரைப் பார்க்க வேண்டும் என எண்ணினேன். மனம் உண்டானால் மார்க்கம் உண்டு என மாமா அடிக்கடி கூறுவார். அதேபோலத் தற்காலத் தொழில் நுட்பத்தின் உதவியால் அவரது இறுதிக் கிரியைகளைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. எங்கு தான் அவர் சென்றாலும் அவர் குரல் மற்றும் அவரை எனது கணவர் படம் பிடித்து வைத்துள்ளார். அவரது நினைவு கள் என்றுமே எம்மிடம் இருக்கும்.

எனது அம்மம்மாவின் தம்பி தான் இவர். எங்கள் அம்மாவின் தாய் மாமன். எங்கள் அம்மா தான் அவர்கள் குடும்பத்தில் மூத்த பிள்ளையாம். தான் விடுமுறைக்கு வந்தால் அம்மாவுடன் வீட்டைச் சுற்றி ஓடி விளை யாடுவாராம். அப்போது அம்மா மயங்கி விழுந்து விடுவாராம், அன்றி லிருந்தே அவள் பலயீனப்பட்டுட்டாள் இப்பவும் வேலை வேலையென ஓடித் தன் உடலைக் கவனிப்பதில்லை என்று கூறுவார்.

நான் சிறு வயதில் கொக்குவிலில் இருந்த போதும் சரி, பின்னர் தாவடிக்கு வந்த போதும் தினமும் அவர் எங்கள் வீட்டுக்கு வரத் தவறுவதில்லை. அன்றிலிருந்து இன்று வரை சைக்கிளில் தான் வருவார். அவர் எப்பொழு தும் சொல்வார் தங்கச்சி போட்டிக்கு தன்னுடன் சைக்கிள் ஓடுவியா? என்பார்.

ஒவ்வொரு வெள்ளியும் நல்லூருக்கு மற்றும் தினமும் முருகன் கோயில், தாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு வருவார். தேவாரம் பாடு வார். நெற்றியில் திருநீற்றுப் பூச்சும் உடலில் தீட்சையுமாக அவரைப் பார்க்க ஆசையாக இருக்கும். தோளில் உத்தரியமும், வேட்டி, சட்டையும் போட்டிருப்பார்.

எந்நேரமும் யோகர் சுவாமிகளின் கதைகள், நற்சிந்தனைகளைச் சிரித்த முகத்துடன் கூறுவார். சோம்பேறிகளுக்குப் போட்டி நடந்ததாம். அதில் யார் முதலில் தொட்டுவிட்டு வருவார்களோ அவைக்கு முதல் பரிசாம். ஆனால் விசில் அடித்ததும் எல்லோரும் போக, ஒருவன் ஆரம் பித்த இடத்திலேயே நின்றானாம். அப்போது நடுவர் ஏன் இன்னும் போக வில்லை எனக் கேட்க எனக்குப் பஞ்சியாக் கிடக்குது நீங்கள் போங்கோ எனக் கூறினானாம், அவனுக்கே முதல் பரிசு கொடுத்தார் களாம் எனக் கூறிச் சிரிப்பார்.

எங்கள் வீட்டுக்கருகில் அவரின் தோட்டம் உள்ளது. அவர் அதிகாலையிலேயே தோளில் மண்வெட்டியோடு நடந்து சென்று அங்கு தண்ணீர் ஊற்றித் தன்னாலான வேலைகளைச் செய்வார். அவருடன் நாங்களும் சென்ற ஞாபகம் உள்ளது. எப்போதும் நேரத்திலும், ஆரோக்கி யத்திலும் முக்கியம் செலுத்துவார். தங்கச்சி உனக்கு எந்தக் கறி விருப்ப மில்லையோ அதை முதலில் கிள்ளி வாய்க்குள் போடு, அதற்குப் பிறகு மற்றதைச் சாப்பிடு என்பார்.

தோசை, இட்டலி, அப்பம், பலாக்காய்க் கறி போன்றவற்றில் அவருக்கு அதிக விருப்பம். நாங்கள் கொடுத்தால் வாங்கி உண்ணுவார்.

தான் முன்பு விடுமுறைக்கு வந்தால் ஆச்சி மீன் குழம்பு வைப்பா, சந்தனப் பொட்டு மாதிரித் தொட்டு நெற்றியில் வைக்கலாம் என்பார். தன்னுடன் எல்லாம் பெண் சகோதரிகள் என்பதால் தாய் சொல்லுவார் நீ அவைய ளோட சண்டை பிடிக்காமல் தியேட்டரில் போய்ப் படம் பார்த்திட்டு வா என்று சொல்லி இரகசியமாகப் பணம் கொடுப்பாராம்.

நான் அம்மாவின் வயிற்றில் இருக்கும் போது காந்தியின் சத்திய சோதனை புத்தகத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னாராம். அதனாலோ என்னமோ எனக்குப் பாடசாலை மற்றும் ஏனைய இடங்களில் நடை பெறும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, நடனம் , ஆங்கிலப் போட்டி களில் பரிசுகளையும், புத்தகங்களையும் வாங்குவேன். அதனால் வீட்டில் நிறைய சான்றிதழ்கள், பதக்கங்களை வைத்திருப்பேன். அவர் என் அம்மாவிடம் “தங்கச்சி! இவளிடம் உள்ள சான்றிதழ்கள் வீரமணி ஐயரி டம் கூட இருக்காது போல” என்று சொல்லிப் பெருமைப்படுவார்.

எங்களது அப்பா பெரிதாகக் கதைப்பது குறைவு. என்னதான் கேள்வி கேட்டாலும் ஒரு பதில் அல்லது சிறு புன்னகையுடன் செல்வார். அப்போ மாமா சொல்வார் “திருச்செல்வம் மாதிரி இருக்க நானும் முயற்சி செய்யிறன், முடியவில்லை” எனக் கூறிச் சிரிப்பார். சில நேரத்தில் கடைச் சாப்பாடு உண்ணும் சந்தர்ப்பம் வந்தால் “மாமா இன்றைக்கு என்ன சாப்பாடு என்று கேட்டால் “மாமியார் வீட்டுச் சாப்பாடு” எனக் கூறிச் சிரிப்பார்.

கடைசியாக நான் யாழ்ப்பாணம் வந்தபோது அவரைத் திருகோண மலைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு கடற்கரைக்குச் சென்று குளிக்கச் செல்லும் போது “மாமா வாங்கோவன், நீங்க தான் நீந்து வீங்களே?” எனக் கேட்க, அவர் தான் மாற்றுஉடை கொண்டு வர வில்லை அடுத்த முறை வாறன் எனக் கூறினார். எப்போதும் தன்னால் இயலாது என்றோ, முடியாது என்றோ விட்டுக்கொடுக்க மாட்டார். எனது மூத்த மகளைக் கண்டதும் என்ரை அக்கா திரும்பத் தன்னைப் பார்க்க

வந்திட்டா என்பார். உங்களின்ர பிள்ளைகளிடம் போய் நாட்டைச் சுற்றிப் பார்க்கலாம் தானே எனக் கேட்டால், இந்த வேப்பமரத்தடியில் கட்டிலில் படுக்கும் சந்தோசமும், கோயில் மணியோசையும் அங்கு இருந்தால் போவேன் என்பார். அவரது நினைவுகள் ஒன்றல்ல, ஓராயிரம். அவர் தன் பெற்ற பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் அனுபவிக்காத வாழ்க் கையை எங்களுடன் தான் கூடுதலாக வாழ்ந்துள்ளார். இதை நான் பதி விடுவதில் அவர்களுக்குப் பொறாமையாக இருந்தாலும் எனக்குப் பெருமையாக உள்ளது.

எங்களது குடும்பத்தில் நடைபெறும் எந்த முக்கிய நிகழ்விலும், முக்கிய பங்கும் முதலிடமும் அவருக்கே. அம்மாவிற்குத் தான் அவர் தாய் மாமனாக இருந்தாலும் நாமும் அவரை மாமா என்று தான் அழைப் போம். எனது ருதுசாந்தியின் போது தலைக்குத் தண்ணீர் வாத்தவரும் அவரே. பின்னர் எனது பிள்ளைக்கு (அவரது பூட்டப்பிள்ளை) முதல் சோறு ஊட்டியவரும் அவரே. இன்று எனது மற்றைய மகளுக்குச் சோறு தீத்தும் நேரம் வந்து விட்டது ஆனால் எனது மாமா இல்லையே....

**திருமதி காயத்திரி கிருபாகரன்**
லண்டன்



நாம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம் ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக்கொள்ள ஒரேமாதிரி வாய்ப்புக்கள் உள்ளன.

# தாத்தாவின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும்

## பூட்டன் (தரணீஷ் குட்டி)

என்றும் எங்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் மாமா முறைப்படி எனக்குத் தாத்தா தான். மாமா என்று எங்களின் அம்மா அழைப்பதால் நாமும் அவ்வாறு மாமா என்று அழைக்கும் நிலை ஏற்பட்டது.

நான் பிறந்த போது என்னைப் பார்க்க யாழ் போதனா வைத்திய சாலைக்கு வந்தாராம். தான் தூக்கிக் கொண்டு போகப் போகிறேன் என்று கூற, அக்கா அவரைக் கலைக்கக் கட்டிலைச் சுற்றி ஓடினார்களாம். மாமா வும் ஆயில்ய நட்சத்திரம், நானும் அதுவே. அதனால் தான் அவர் தன்னு டைய பிள்ளை என்பார். தாவடியில் அவர் புகையிலைத் தோட்டம் செய்வது வழக்கம். நான் முதல் கன்று வைப்பதற்கு என்னை அழைத்துச் செல்வார்.

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடைபெறும் போது ஒவ்வொரு வருடமும் நான் சம்பியன் கோப்பை வாங்கத் தவறுவதில்லை. அவர் வரும் போது அதைக் காட்டினால் “இனி அவள் சுசந்திகாவுடன் தான் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும்” என்று நகைச்சுவை ததும்பக் கூறுவார்.

நான் B.O.C இல் வேலை செய்து கொண்டிருக்கும் போது பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார். தன்னுடைய பேரன் குமரனும் தற்போது வங்கியில் வேலை செய்கிறான் என்று பெருமிதமாகக் கூறுவார்.

எங்கள் மகன் தரணீஷ் பிறந்து ஒன்பதாவது நாள் முதன் முதலாகத் தொட்டிலில் அவரைக் கிடத்தினார். தொடர்ந்து 31 ஆம் நாள் நிகழ்விலும், ஆறாம் மாதம் பாற்சோறு பருக்கியும், தொடர்ந்து பல்லுக் கொழுக்கட்டை கொட்டியும், அதன் பின்னர் திவ்ய மகாலில் வெகு விமரிசையாக நடை பெற்ற முதலாவது பிறந்த நாளுக்கு இரண்டாம் மாடிக்குப் படியேறி வந்து கலந்து கொண்டமை எமது மனதில் நீங்காத நினைவுகளாக உள்ளன.

வழமை போல் தாவடிப் பிள்ளையாருக்கு ஒரு குட்டும், தாவடி முருகனுக்கு ஒரு சலாமும் போட்டு விட்டு நேரே வருகிறேன் என்பார். 11 மணியளவில் எங்கள் வீட்டிற்கு அவர் வருவது வழக்கம். கேற் திறக்கும் சத்தம் கேட்டதும் மாமா வருகிறார் என்றால் ஓடிச் சென்று பார்த்து விட்டு இரு கைகளையும் சேர்த்து "சாய்ந்தாடம்மா" ஆடிக் காட்டுவார். பின்பு தரணீசும் இவருமாகச் சேர்ந்து ஹோலில் தவழுவார்கள். இருவருக்கும் சிலவேளைகளில் போட்டியும் நடைபெறும். எப்படியும் தரணீஷ் முந்தி விடுவான். உடனே மாமா "பார்த்தியே தங்கச்சி இவனுக்கு இப்பவே முந்த வேணும் என்ற எண்ணம் இருக்குது, இதை என்ரை ஆச்சி பார்க்க வேணும், உனக்கு நல்ல அடி போடுவா" என்று கூறிச் சிரிப்பார். சில வேளைகளில் கதைத்துக் கொண்டிருந்தால் அவரின் வேட்டியைப் பிடித்து இழுத்து, விளையாட வரும்படி அழைப்பான். அடிக்கடி அவர் தரணீஷைப் பார்த்து "நீ தான்ரா கொடுத்து வைத்தனீ" என்பார். கண் பட்டாற் போல மறைந்து போய்விட்டார் எங்கள் பாசத்துக்குரிய மாமா. இருவரினதும் உரையாடல்கள், தவழ்ந்து விளையாடிய நிகழ்வுகளையும் வீடியோ பதிவு கள் மூலம் தரணீஷ் ரசித்துப் பார்த்த வண்ணம் இருக்கிறான்.

**திருமதி திவ்யா மதுரன்**
பிராந்திய கடன் மையம்,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

# கனத்த இதயத்துடன்!

அன்புடன் மிகுந்த பாசத்துடன் எங்களை வளர்த்ததுடன் எமது குடும்பத்தின் குலவிளக்காக நிறைவாக வாழ்ந்து அமரத்துவம் அடைந்த எனது அன்பு மாமாவுக்கு. கனத்த இதயத்துடன் ஆழ்ந்த அஞ்சலியை தெரிவிக்கின்றேன். எளிமையான மிக தெய்வபக்தியுடன் கூடிய குடும்பத்தில் ஆறு பெண் சகோதரிகளுடன் தனியோரு ஆணாக பிறந்து சகோதரிகளுடனும் மருமக்களுடனும் மிக அன்பாக வாழ்ந்ததுடன் தனது கடமைகளை சரியாக நிறைவேற்றி மகிழ்ந்தார்.

தெய்வீக தரிசனம் மட்டுமன்றி சித்தர்கள் ஞானிகளுடைய அருளை பெற்று தெய்வீக ஞானம் பெற்றவராகவும். கல்விப்பணி சமுகப்பணிகளை சிறப்பாகயாற்றி சமுகத்தில் நல்லதொரு முழுமையான மனிதனாக வாழ்ந்திருக்கின்றார்.

**சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்**
**அல்லும் பகலுமவன் அடியிணையே தொழவேண்டும்.**

என்ற யோக சுவாமிகளது வாக்குக்கு அமைய நல்லூரானை தினமும் வணங்கி அருள் பெற்றார்

என்னுடைய மூத்த மகளுக்கு ஏடு தொடக்கி வைத்து கல்விப் படியை ஆரம்பித்து வைத்தார். கடந்த வருடம் நாம் இலங்கைக்கு வந்தி

ருந்தபோது மிக அன்போடு எங்களுடன் உறவாடியாதுடன் நாங்கள் மீண்டும் திரும்புகின்ற வேளை நேரத்துடன் வந்து மிக அன்போடு எங்களை வழியனுப்பி வைத்ததை மறக்க முடியாது. மாமாவின் இறுதிக் கிரியைகளில் நேரடியாக பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று வருந்துகிறேன்.

அவரது ஆத்மா எல்லாம் வல்ல தாவடியூர் வேதவிநாயகனுடைய திருவடிகளை அடைய வேண்டும் என்று எமது குடும்பத்துடன் பிராத்திக் கின்றோம்.

*நீங்காத நினைவுகளுடன்*
*அன்பு மருமகன்*
**கா. சாந்திநாதன்**
நியூசிலாந்து.



# என் அருமை மாமாவே
# எங்கே சென்றீர்கள்?

எம் மீது அன்புள்ளம் கொண்ட எம் அருமை மாமா
எமது தந்தையின் எதிர்பாரா இழப்பில் திகைத்து நின்ற வேளை,
தன்னில் எம்மையெல்லாம் அரவணைத்து அறிவுரைகள்
கூறி ஆதரவளித்தீர்கள்.

எம் மாமா.....
அன்புள்ளம் உடையவர் அறிவு மிக்கவர்
பண்பானவர் பழக இனிமையானவர்
கபடமில்லா உள்ளம் கொண்டவர்
கம்பீர நடையுடன் கனிவுடனே வாழ்ந்தவர்
உறவினர் சுற்றத்தார் போற்றும்
தூய நன் மனம் கொண்டவர்
நீண்ட கால ஆசிரியப் பணியில்
கடமை தவறாத கண்ணியம் மிக்கவர்
நேர்மை, நேர முகாமைத்துவம், லீவு எடுக்காமை
அவரின் தொழிலின் அணிகலன்கள்
அவரது அர்ப்பணிப்பான சேவைக்கு
அவரது நன் மாணாக்கரே சான்றாகும்

சிரித்த முகமும் அவரது சிந்திக்க வைத்திடும்
தத்துவப் பேச்சும் அவரின் அறிவின் ஆழத்தை
எமக்கு உணர்த்தி நிற்கும்
மாமா மாமா என நான் பாசமுடன்
அழைத்த போது தான் சேய் போல
அன்பு காட்டி நல்லறிவு புகட்டினார்
ஆசிரிய சேவையினைப் பெற்று
கலைமாணி, முதுகலைமாணி எனப் பட்டங்கள்
பெற்ற போது உளமார உவகை கொண்டார்
மருமகளாய் அல்ல மகளாய்
உரிமை தந்த எமது மாமாவின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

*மருமகள்*
**திருமதி. சிவகாமசுந்தரி தயாளன்**

**ஒரு மனிதன் தன் பிள்ளைக்களுக்குச் செல்வத்தைச் சேர்த்து வைப்பதைவிட, உழைக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுப்பது, அவர்களுக்கு வாழ்க்கையில் வெற்றியைத் தேடித் தரும்.**
**– ரிச்சர்ட் வாட்லி**



# மறக்க முடியாத ஓர் உறவு

ஐயா என்றவுடன் நினைவிற்கு வருவது அவரது திருநீற்றுப் பூச்சும் அவரது அன்பான பேச்சும் தேவாரம் ஓதுவதும் தான் .

1995 இல் இடப்பெயர்வு காரணமாக எங்களுடைய வீட்டிற்கு ரீச்சர் அன்ரியும் (அவருடைய மனைவி) ஐயாவும் இருப்பதற்காக வந்தார்கள். அப்போது எங்களுக்குள் உறவெதுவும் இல்லை. ஆனால் இன்று ஏழேழு யென்மமாக பழகிய ஓர் உறவு.

அவர்கள் வீட்டிற்கு வந்த போது எனக்கு மூன்று வயதிருக்கும். அப்போது நான் அவர்களின் செல்லப்பிள்ளை. அப்போது மட்டுமல்ல அவர்கள் பிரச்சினை தீர்ந்து கோண்டாவில் சென்ற பின்பும் எனது அப்பா அவரை பார்க்கப் போனால் முதலில் கேட்பது ஏன் பவித்திரா வரவில்லை என்று தானாம்.அத்தனை அன்பு என் மீது.

அவர்கள் எங்களுடைய வீட்டிலிருக்கும்போது ரீச்சர் அன்ரியும் ஐயாவுமாய் சொல்லித்தந்த பாடல்களும் தேவாரங்களும் இன்றும் என் மனதில் உள்ளன.

ரீச்சர் அன்ரி ஐயா என்ற உடனேயே என் மனதில் வருவது

"ஒன்றெண்டு சொல்லுங்கோ ஒரு விரலைக் காட்டுங்கோ

இரண்டெண்டு சொல்லுங்கோ………” என்ற பாடல் தான் .இன்று இருபத்து நான்கு வருடங்கள் கழித்தும் என் மனதில் உள்ளதென்றால் ஐயாவும் ரீச்சர் அன்ரியுமாய் மனதில் ஆழமாய் பதியும்படி அபினயத் துடன் சொன்ன விதமே.

ஐயாவை பார்க்க மீசாலையிலிருந்து காலையில் சென்று விடுவோம். பெரும்பாலும் நாம் போகும் போது இறைவழிபாட்டில் இருப் பார். அவற்றை முடித்து விட்டு வந்து சுகநலம் விசாரிப்பார் புத்திமதிகள் கூறுவார் படித்து பல்கலைக் கழகம் போகவேண்டும் என்பார். எவ்வளவு உயரத்திற்கு வந்தாலும் பிறந்த ஊரையும் தாய் மொழியையும் சைவத் தையும் மறக்கக் கூடாதென்பார் .

இன்றும் இவை என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. பின்பு அவரிடம் இருந்து விடை பெறும்போது நெற்றியில் விபூதி வைத்து ஆசீர்வதித்து அனுப்புவார். எனக்கு பல்கலைக்கழகம் செல்வதற்கு அனுமதி கிடைத்ததை கூறியபோது மனமார வாழ்த்திய உறவில் ஐயா வும் ஒருவர்.

உறவில்லாமல் உறவான நாம் இறுதி நேரத்தில் ஐயாவை பார்க்க முடியவில்லையே.

ஐயா எம்மை விட்டுச் சென்றாலும் ஐயாவின் ஆசீர்வாதம் எமக்கு என்றும் இருக்கும்.

***ஐயாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.***

***ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!***

என்றும் பாசமுடன்
**பவித்திரா**
மீசாலை.

# இலக்கியாவும் அப்பப்பாவும்....

"அவ கடவுள் கொடுத்த வரம்
நல்ல கவனமா வளவுங்கோ"

இலக்கியாவைப் பற்றிய தனது தொலைபேசி உரையாடல்களில் அப்பா தன் கரிசனையைக் காட்டுவார். பல வருடங்களுக்குப் பிறகு எமக் குக் கிட்டிய பிள்ளைப்பேறு என்பதால் அப்பாவின் கவனம் இலக்கியா மீது ஒரு படி இன்னும் அதிகமாக இருக்கும்.

"நாகம்மாளை கும்பிடுங்கோ
எல்லாம் சுகப்படும்"

பிள்ளைக்கு ஏதும் வருத்தம் என்று ஆதங்கப்பட்டால் அப்பாவின் இறை நம்பிக்கை தான் மருந்தாகக் கிட்டும்.

இலக்கியாவின் முதலாவது பிறந்த தினத்தை அவரின் அப்பப்பா, அப்பம்மாவோடு கொண்டாட வேண்டும் என்ற எம் வேண்டுதலும் பலித்தது அப்போது.

அப்பாவுக்கு குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவதென்றால் தலைகீழாகவும் நடித்துக் காட்டுவார். இலக்கியா தன் அப்பப்பா போலவே வேடிக்கையாகக் கத்திக் காட்டுவார்.

கடந்த சித்திரையில் மீண்டும் தன் அப்பப்பாவை இலக்கியா காணும் வாய்ப்பும் கிட்டியது. கொழும்பு வீதியில் நடக்கும்போது தன் அப்பப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டே அவரைக் கவனமாக நடத்திக் கொண்டு போவார்.

“இலக்கியா ! ஆனா ஆவன்னா சொல்லுங்கோ”

என்றதும் இலக்கியா

“ஆனா, ஆவன்னா” என்று தொடங்க,

“ஆனா ஊனா, ஏனா” என்று அவரின் அப்பப்பா வேடிக்கையாத் திசை திருப்புவார். இலக்கியா அவரை ஏசிப் போட்டு மீண்டும் “ஆனா ஆவன்னா” தொடங்குவார். “தன் அப்பப்பா ஒரு தமிழ் வாத்தியார் என்று இலக்கியாவுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.”

“கொட்டிக்காறி கெட்டிக்காறி” என்று பெருமையடிப்பார் அப்பப்பா.

“அப்பப்பாவுக்குச் சுகமில்லையாம் அதுதான் அப்பா “ரீலங்கா போய் விட்டார்” என்று இலக்கியா சொல்லிக் கொண்டிருந்தாராம்.

நேற்றுக் கூட

“அப்பா! நாங்கள் “ரீலங்கா போய் அப்பப்பா, அப்பம்மாவைப் பார்ப்போமோ?” என்று கேட்டார் இலக்கியா.

தன்னுடைய அப்பப்பா இனி இலக்கியாவைப் பார்க்க மாட்டார் என்பது இலக்கியாவுக்கு இதுவரை தெரியாது. தன் அடுத்த தாயகப் பயணத்திலும் தன் அப்பப்பாவைத் தேடுவார்.

அப்பப்பாவைப் பற்றி ஏதாவது எழுதுங்கோ என்று கேட்டேன். இப்போதுதான் எழுத்துக்கூட்டி எழுதப் பழகும் இலக்கியா படம் கீறித் துண்டு துண்டாக எழுதித் தந்தார்.


I MISSYOU
LARA
ILAKKIRA

# அன்னாருக்கு
# எம் ஆழ்ந்த அஞ்சலிகள்

தாவடியூரைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் கனகசபாபதி அவர்கள் எமது ஆலய முருகன் மீது அளவற்ற பக்தி உடையவர். தனது சிறு பராயம் முதல் முதுமைக் காலம் வரை தினமும் முருகனை வணங்கி வருபவர். எமது ஆலயத்தின் புராதன வரலாற்றுக் கதைகளை நாம் இவர் மூலமே அறிந்து கொண்டோம். இப்போது உள்ள தலைமுறையில் எமது ஆலயம் தொடர்பில் புராதன பல தகவல்களை அவர் மூலமே அறிந்து கொண்டோம்.



கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்ற எமது ஆலய இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவுக்கான முதலாவது அடிகல்லை எமது ஊரைச் சேர்ந்த கனகசபாபதி வாத்தியார் அவர்கள் வைத்தார். அவர் எல்லோருக்கும் வயதில் மூத்தவர். அத்துடன் எமது ஊரில் உள்ள பலருக்கு அன்றைய காலத்தில் ஏடு தொடக்கியவர் இவரே. இன்றும் வயோதிப நிலையிலும் எமது ஆலயத்திற்கு தினமும் வந்து முருகனை வழிபடுவதை தனது அன்றாட கடமையாகக் கொண்ட வர். அவரைத் தொடர்ந்து ஊர் மக்கள் எல்லோரும் அடிக்கல்லை வைத் தார்கள்.

தாவடி முருகன் கோயில்
(முருகமூர்த்தி கோயில்)
**அடியவர்கள்.**

எமது தலைமுறையினர் வாத்தியார் என்று அழைத்த பெயர் பட்டியலில் கடைசி வாத்தியாராக முற்றுப்புள்ளி வைத்தவர் தங்கள் தந்தையார் என்பது என் நினைவில் தெரிந்து. ஏனெனில் எமது தந்தை யார் சின்னராசா அவர்கள் அடிக்கடி கூறுவார் தானும் உங்கள் தந்தையும் தான் வாத்தியாராக இன்றும் சொந்த மண்ணில் உலா வருபவர்கள். என்னைப் பொறுத்தவையில் அவர்கள்

90 அகவை கடந்து 1000 பிறை கண்ட பல அனுபவசாலிகள்.

**திருமதி இந்துமதி ஸ்ரீனிவாசன்**

# துயர் கொள்கின்றோம்

**எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும்
ஓய்வுக்குப் பின்பும் தாவடி இந்துவை தனது இரண்டாம்
வீடாய் மனதில் கொண்டு வாழ்ந்து வந்தவருமான**



# அமரர்
# விசுவலிங்கம் கனகசபாபதி

*அவர்களின் பிரிவால் துயருறுவதோடு அன்னாரின்
ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்துக்
கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
உத்தியோகத்தவர்கள் மற்றும்
பழைய மாணவர்கள்.**

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 . 05 . 1929 |  | 01 . 09 . 2019 |

தாவடியை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## திரு.விசுவலிங்கம் கனகசபாபதி

## (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

இணுவில் பொது நூலக அங்கத்தவர் திரு.க.பிரபாகரின் அன்புத் தந்தை

**அமரர்.விசுவலிங்கம் கனகசபாபதி**

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரராஜசேகரனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்விநாயக அடியார்கள்,
இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையத்தினர்.

02.09.2019

# கண்ணீர்க் காணிக்கை

தோற்றம்
15 . 05 . 1929



மறைவு
01 . 09 . 2019

ஓய்வுநிலை ஆசிரியர்
யா/தாவடி இந்து தமிழ்கலவன் பாடசாலை

அமரர்
## விஸ்வலிங்கம் கனகசபாபதி

அன்பு தீபம் அணைந்ததேனோ?
இப்புவியில் வாழ்ந்த எவரும்
இறுதி காண்பது விதியின் பலனோ?
ஒப்பிலா உண்மைத் தத்துவங்கள்
உங்கள் வாயில் வருமே என்றும்
இப்புவியில் வாழ்ந்து சாதித்த உங்களை
இனி எப்புவியில் காண்போம்?
உங்கள் பிரிவால் தவிக்கும் நெஞ்சங்களை
காலமே விரைந்து ஆறுதல் தாராயோ

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**S.M மருத்துவ ஆய்வுகூடம்**
**கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

# அப்பாக்களே !
# நீங்கள் உங்கள் மக்களுடைய உற்ற நண்பனாக மாறுங்கள்!

"அப்பா, உங்களுக்கு எவ்வளோ விஷயம் தெரிஞ்சிருக்கே. அதில் கொஞ்சமேனும் சொல்லித்தர முடியுமா?" என உங்கள் மகன் எப்போதாவது இப்படி உங்களைக் கேட்டிருந்தால் நீங்கள் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பீர்கள்? எவ்வளவு ஆச்சரியத்தில் ஆழ்ந்து போயிருப்பீர்கள்? அப்போது, ஒரு அப்பாவாக உங்கள் முகத்தில் ஆயிரம் 'வாட்ஸ்' பெருமிதம் பளிச்சிட்டிருக்கும்! ஆனால், உங்கள் மக்கள் இன்னும் ஒரு படி மேலே போய், நீங்கள் கொடுத்த ஆலோசனைப்படி நடந்து பயனடைந்தோம் என்று சொல்லி இருந்தால்? சந்தோஷத்தின் உச்சிக்கே நீங்கள் சென்றிருப்பீர்கள் அல்லவா?.

ஆனால் வருடங்கள் உருண்டோடிய பிறகும், உங்கள் மக்கள் உங்கள் மீது மதிப்பு மரியாதையையும் வைத்திக்க வேண்டும் என எண்ணினால், அல்லது அக்கறையோடு உங்களை அவன் பராமரிக்க வேண்டும் என எண்ணினால், அவர்களுடைய உற்ற நண்பனாக, அவர்கள் தங்கள் மனம் விட்டுப் பேசக்கூடிய ஒரு வராக நீங்கள் மாறுவதைத் தவிர வேறு இலகுவான வழி ஒன்றுமில்லை.

பல குடும்பங்களில் பெரும்பாலும், அப்பாவுடைய சம்பாத்தியத்தில் தான் முழு குடும்பமும் சீவிக்கிறது. அதனால், ஒருநாளில் முக்கால்வாசி நேரத்தை அவர் வேலைக்கே செலவிட வேண்டியிருக்கிறது. சில நாடுகளில், அப்பாக்கள் தங்களுடைய பிள்ளைகளோடு செலவிடும் நேரம் மிகவும் குறைவு என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. உதாரணமாக, சமீபத்தில் பிரான்சு நாட்டில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு அப்பாக்கள் பிள்ளைகளோடு ஒரு நாளில் சில நிமிடங்கள் கூடச் செலவிடுவதில்லை எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

நீங்கள் உங்கள் அப்பாவோடு நெருங்கிப் பழகினால்தான் நீங்கள் உங்கள் மக்களிடம் பாசம் காட்ட முடியம். அப்பா, பிள்ளைகள் பாசம் என்ற பழக்க வழக்கம் தொன்று தொட்டு வரவேண்டியதொன்று. உங்கள் அப்பாவுடைய பழக்க வழக்கங்கள் உங்களிடமும் இருக்கிறதா? எந்தெந்த விஷயங்களில் அவரைப் போல் இருக்கிறீர்கள்?

சில ஊர்களில் அப்பாக்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் தலையிட மாட்டார்கள். பொதுவாகப் பிள்ளைகள் பார்த்துக்கொள்வதெல்லாம் அம்மாவுடைய வேலை என்றுதான் சொல்லுவார்கள். இன்னும் சில நாடுகளில், பிள்ளைகளைக் கண்டிப்பது மட்டுமே அப்பாவின் வேலை என நினைக்கிறார்கள். பொதுவாக எங்கள் மத்தியில் எல்லாம் அப்பா பிள்ளைகளோடு விளையாட மாட்டார். அப்படி விளையாடினால் பிள்ளைகளுக்கு அவர் மேல் இருக்கிற மதிப்பு, மரியாதையெல்லாம் போய்விடும் என்று நினைப்பார்கள். அதனால் பலர் தங்கள் பிள்ளைகளோடு விளையாடுவதும் இல்லை, பேசிப் பழகுவதும் இல்லை.

பொதுவாகப் பையன்கள் சிறுவயதிலிருந்தே அப்பாவை அப்படியே கொப்பியடிக்க ஆசைப்படுவார்கள். அதனால், சின்ன வயதிலேயே உங்கள் மகனுக்கு

இருக்கும் அந்த ஆசைக்கு அஸ்திவாரம் போடுங்கள். அதை எப்படிச் செய்யலாம்? அதற்காக, அவனோடு எப்போதெல்லாம் நேரம் செலவிடலாம் என்று சிந்தியுங்கள்.

முடிந்தபோதெல்லாம் உங்களுடைய அன்றாட வேலைகளில் அவனையும் சேர்த்துக்கொள்ளுங்கள். உதாரணத்திற்கு, வீட்டு வேலைகளில் அவனையும் கூட மாட உதவி செய்யும்படி சொல்லலாம். வீட்டைச் சுத்தம் செய்யும்போது அவனிடமும் ஒரு சின்னத் துடைப்பத்தைக் கொடுக்கலாம். அல்லது தோட்ட வேலை செய்யும் போது ஒரு சின்ன மண்வெட்டியைக் கொடுக்கலாம். அப்போது அவன் எவ்வளவு குஷியாகி விடுவான் தெரியுமா? இருக்காதா என்ன! அவனுக்குப் பிடித்த ஹீரோவோடு, ஆம்! உங்களோடு, வேலை செய்ய அவனுக்குக் கசக்குமா? இப்படிச் சேர்ந்து செய்யும்போது வேலையை முடிப்பதற்கு அதிக நேரம் எடுக்கலாம், ஆனால் உங்களுக்கும் அவனுக்கும் இடையே நெருக்கம் அதிகமாகும். கஷ்டப் பட்டு உழைப்பது எப்படியென்று அவனுக்கு கற்றுக்கொடுக்கவும் முடியும். அன்றாட வேலைகளில் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனப் பல காலத் திற்கு முன்பே அப்பாக்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றனர். பிள்ளை களிடம் பேசுவதற்கும் அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கும் அது நல்ல வாய்ப்பாக இருக்கும்.

உங்கள் மக்களோடு சேர்ந்து வேலை செய்வதோடு, அவர்களோடு விளை யாடவும் நேரம் ஒதுக்குங்கள். அப்படி விளையாடும்போது அவர்களுடன் சந்தோஷமாக இருக்க முடியும், அவர்களும் நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்வார்கள். ஒரு ஆய்வு சொல்கிறபடி, அப்பா, பிள்ளைகள் சேர்ந்து விளை யாடும்போது சாதனையாளர்களாக, தைரியசாலியாக அவர்கள் ஆவதற்கான ஊக்கத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

அப்பாவும் பிள்ளைகளும் சேர்ந்து விளையாடுவதால் மற்றொரு முக்கியமான பயனும் உண்டு. “விளையாடும்போதுதான் ஒரு பிள்ளை தன் அப்பா வோடு மிகவும் சகஜமாகப் பேசுகிறான்” என்று சொல்கிறார் ஒரு ஆய்வாளர். பொதுவாக விளையாடும்போது, ஒரு அப்பாவால் தன் மகனிடம் சொல்லிலும் செய லிலும் பாசத்தைக் காட்ட முடியும். அப்படிச் செய்யும்போது பாசத்தை எப்படி வெளிக் காட்டுவதென தன் பையனுக்கு அவர் கற்றுக் கொடுக்கிறார். அடிக்கடி ஒன்றாச் சேர்ந்து விளையாடும் தந்தை ஒருவர், “விளையாடும்போது தான் நான் என் பையனைக் கட்டி அணைப்பேன், அப்படியே அவனும் என்னைக் கட்டித் தழுவிப் பதிலுக்குப் பாசம் காட்டப் பழகி விட்டான்.” என்று சொன்னார்.

மக்களோடு உள்ள நட்பைப் பலப்படுத்துவதற்கு இன்னொரு வழி : தினமும் அவர்கள் தூங்குவதற்கு முன் ஒரு கதையை அவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள் அவர்கள் தமது சந்தோஷங்களை, சங்கடங்களை சொல்லும்போது காது கொடுத்துக் கேளுங்கள். இப்படிச் செய்து வந்தால், அவர்கள் பெரியவர்களானதும் உங்களுக்கிடையே நல்ல பேச்சுத்தொடர்பு இருக்கும். ரீனேஜ் பிள்ளைகள் சில ருக்கு அப்பா பேசும் விஷயங்கள் சுவாரஸ்யமாக இருக்காது. நீங்கள் கேட்கிற கேள்விகளுக்கு உங்கள் பிள்ளைகள் பட்டும்படாமல் பதில் சொன்னால், “அவர்க ளுக்கு உங்களோடு பேசவே இஷ்டமில்லை” என்று முடிவுகட்டி விடாதீர்கள். நீங்கள் பேசும் விதத்தை கொஞ்சம் மாற்றினால் அவர்கள் தாராளமாகப் பேசுவார்கள்.

விளையாட்டில் உங்கள் மகனுக்கு ஆர்வம் இல்லையென்றால்? விட்டு விடுங்கள். இராத்திரி நேரத்தில் முற்றத்தில் இருந்து வானத்தை அண்ணார்ந்து பார்த்து ரசிப்போம். நட்சத்திரங்ளைக் கடவுள் படைத்ததைப் பற்றிப் பேசுவோம், சொந்த விஷயங்களையும் பேசுவோம். சொல்லப் போனால், உப்பு சப்பில்லாத விஷயத்திலிருந்து காரசாரமான விஷயம்வரை எல்லாத்தையுமே பேசுவோம்” என்கிறார் ஒரு அப்பா.

“அப்பா, இதைப் பாருங்களேன், எப்படி இருக்கு?” என உங்கள் சுட்டிப் பையன் புதிதாக எதையாவது செய்தபோது உங்களிடம் காட்டி இப்படிக் கேட்டிருக் கிறானா? இப்போது, அவன் ரீனேஜ் பையனாக வளர்ந்த பிறகும் இதே மாதிரி கேட்கிறானா? ஒருவேளை அப்படி வாயைத் திறந்து கேட்கமாட்டான். ஆனால் நீங்களாகவே அவனைப் பார்த்து மனதார பாராட்டினீர்கள் என்றால் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கிற மனப்பக்குவம் உள்ள ஆளாக அவன் வளருவான்.

சில அப்பாக்களுக்கு அப்படிப் பாராட்டுவதும் பாசத்தைக் காட்டுவதும் இயல்பாக வருவதில்லை. அதற்குக் காரணம், அவர்களுடைய பெற்றோர் அவர் களது திறமைகளைப் பாராட்டாமல் எப்போதும் குறைகளையே குத்திக் காட்டியிருக் கலாம். நீங்கள் அப்படிப்பட்ட குடும்பத்தில் வளர்ந்தவர் என்றால் உங்களுடைய மகனின் தன்னம்பிக்கையை வளர்க்க நீங்கள் கடினமாக முயற்சி செய்ய வேண்டும்.

பெரிய பெரிய இலக்குகளை வைத்து அதை அடைய உங்கள் மகனுக்கு உதவலாம். இதுவும்கூட தன்னம்பிக்கையை வளர்க்க அவனுக்கு உதவும். ஒரு வேளை, நீங்கள் நினைக்கிற அளவுக்கு வேகமாக அந்த இலக்குகளை அவன் அடையவில்லை என்றால்? அல்லது நீங்கள் நினைப்பது போன்ற இலக்குகளை அவன் வைக்காமல் வேறு ஏதாவது நல்ல இலக்குகளை வைக்கிறான் என்றால்? அப்போது, உங்களுடைய எதிர்பார்ப்புகளைக் கொஞ்சம் மாற்ற வேண்டியிருக்கும். “அடைய முடிந்த இலக்குகள மட்டும் வைக்க என் மகனுக்கு உதவுகிறேன். அதே சமயத்தில, அந்த இலக்குகளை எல்லாம் அவனாகவே வைக்கவேண்டும். நான் அவனுக்காக அதனை வைக்கக்கூடாது என்றதில் கவனமாக இருக்கிறேன். அந்த இலக்குகளை அவன் சீக்கிரமா அடைய வேண்டும் என்பதற்காக நான் வீணாக அதனுள் மூக்கை நுழைப்பதில்லை. உங்கள் மகன் சொல்வதைக் காது கொடுத்து கேட்டால்... அவன் அடைந்த வெற்றியைப் பாராட்டினால்... தோல்வி ஏற்பட்டாலும் அவனைத் தூக்கி நிறுத்தினால்... அவன் வைத்த இலக்குகளை அடைய நீங்கள் உதவுகிறீர்கள் என்று அர்த்தம்.

அப்பா - மகன் உறவில் விரிசல்கள் ஏற்பட்டாலும் போகப்போக அவன் அப்பாவோடு நெருக்கமாக இருக்கவே விரும்புவான். வெற்றியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பும் அன்புள்ள அப்பாவோடு நண்பராக இருக்க எந்த பிள்ளைக்குத்தான் பிடிக்காது?

# நன்றி நவிலல்



- எங்கள் குடும்பத் தலைவர், அருமைத் தந்தை அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எங்கள் துன்பத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும்,
- இறுதிக் கிரியைகள் முறையே நடைபெற உதவியவர்களுக்கும்
- இரங்கற் செய்திகளைத் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் வழியாகத் தெரிவித்தவர்களுக்கும்
- அந்தியோட்டி சார்பான கிரியைகளிற் கலந்து கொண்டோருக்கும்
- அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையை ஒழுங்கு செய்தும், சிறப்புற நடத்திய நண்பர்கள், உறவினர்களுக்கும்
- ஆத்ம சாந்திக்காக சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களைத் தந்துதவிய சிவதொண்டன் நிலையத்தாருக்கும்
- அமரரின் ஆத்ம சாந்திக்கான சிறப்பு சாயி பஜனையை நடத்திய கோண்டாவில் சத்யசாயி சமிதி அமைப்பாளர், பக்தர்களுக்கும்
- அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு, நடைபெற்ற மதிய போசனை விருந்தில் கலந்து கொண்டவர்களுக் கும் எமது உளமார்ந்த நன்றி



**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில், யாழ்ப்பாணம்.**

**மனைவி : க. தவமணி**
**மக்கள் : இரகுபதி , பிரபாகர்**

கண்டிப்பிலும் தண்டிப்பிலும் கொதித்திடும் உன் முகம்
காய்ச்சல் வந்து படுக்கையில் துடிப்பதும் உன் முகம்
அம்பாரியாய் ஏற்றிக் கொண்டு அன்று சென்ற ஊர்வலம்

தகப்பனின் அணைப்பிலே கிடந்ததும் ஓர் சுகம்
வளர்ந்ததுமே யாவரும் தீவாய் போகிறோம்
தந்தை அவனின் பாசத்தை எங்கே காண்கிறோம்
நமக்கெனவே வந்த நண்பன் தந்தை

-பாடலாசிரியர் நா.முத்துக்குமார்

எவகிறீன் அச்சகம், யாழ்ப்பாணம். 021 221 9893